பக்கங்கள் எட்டு
விலை ரூபா: 5.00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை 28 புதன்கிழமை (13-12-2000) தொ. பேசி 3378 ஒலி: 359

லாலாசோப்
சன்சயின் சோப்
விநியோகஸ்தர்
ஸ்ரீகிருஷ்ணாஸ்ரோர்ஸ்
பிரதான வீதி,
சங்கானை
லாலாசோப் அச்சுவேலி
(கி.1045)

★ பொருளாதாரத் தடைநீக்கம்

★ இயல்பு நிலையை தோற்றுவித்தல்

# பேச்சுவார்த்தைகளின் பின்னரே

# சாத்தியமென கதிர்காமர் அறிவிப்பு!

## விரைவில் புதிய அறிக்கை விடப்படும்.

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்பு அவர்களது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கான பொருளாதாரத் தடையை நீக்க முடியாதெனவும்; வேண்டுமாயின் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையின்போது பொருளாதாரத் தடையை நீக்குவது தொடர்பாக ஆராயலாம் என்றும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் உறுதிபடக் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழீழ விடுதலைப் புலிகளை இலங்கை அரசாங்கம் உடனடியான பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளது. இதற்கான அழைப்பை அரசின் சார்பில் நானே விடுத்துள்ளேன்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கு முன் அவர்களது கட்டுப்பாட்டுப் பகுதியில் விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை நீக்கமுடியாது. நீக்குவதானால் புலிகளுடன் பேசிய பின்னரே நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த மாவீரர்தின உரையின்போது விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபா

→8ஆம் பக்கம் பார்க்க

# புலிகளை தடை செய்வதுபற்றி அடுத்த ஆண்டு பரிசீலிக்கப்படும்

## பிரிட்டிஷ்தூதுவர் ஜலண்ட்டுக்கு கடிதம்

(கொழும்பு)

பயங்கரவாதம் தொடர்பான பிரச்சினைகளுக்குபிரிட்டன் மென்போக்கைக் காட்டப் போவதில்லை. இவ்வாறு இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் ஜலண்ட் பத்திரிகைக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய வெளியுறவு இணை அமைச்சர் பீற்றர் ஹெயின் இலங்கை வந்தபோது சில செய்தி ஊடகங்களில் வந்த கட்டுரையின் தொனியைக் கருத்திற் கொண்டு எழுதிய அக் கடிதத்தில் பிரிட்டிஷ் தூதுவர் மேலும் தெரிவித்திருப்பதாவது; பிரிட்டனில் கடந்த ஜூலை மாதத்தில்நிறைவேற்றப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஆறு மாதகால இடைவெளி தேவையாகும்.

அடுத்த ஆண்டு இச் சட்டம்

(8ஆம்பக்கம் பார்க்க

# ஈழவேந்தன் நாடு கடத்தப்பட்டதை கண்டித்து தமிழகத்தில் ஆர்ப்பாட்டம்

## பழ. நெடுமாறன் அழைப்பு

(கொழும்பு)

தமிழீழ ஆதரவாளர் ஈழவேந்தனை இலங்கைக்கு பலவந்தமாக நாடு கடத்தியதற்கு ஆட்சேபம் தெரிவித்து எதிர்வரும் 15ஆம் திகதி கண்டன ஆர்ப்பாட்டமொன்றை நடத்தப்போவதாக தமிழர் விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

இக்கண்டன ஆர்ப்பாட்டம் தொடர்பாக தமிழக பொது அமைப்புக்களுக்கு தெரியப்படுத்தும் வகையில் நேற்று அறிக்கையொன்று வெளியிடப்பட்டது அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

கடந்த இருதசாப்தங்களாக தமிழகத்தில அகதி அந்தஸ்து பெற்று வாழ்ந்து வந்த ஈழவேந்தனை திடீரென இலங்

(8ஆம் பக்கம் பார்க்க)

★ காங்கேசனில் இருந்து 1250 பேருடன்

# 4மணி நேரம் தாமதித்து "லங்கா முடித்த" சென்றது!

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைக்கும், திருமலைக்குமிடையிலான பயணிகள் கப்பல் சேவையில் ஈடுபட்டுள்ள 'லங்கா முடித்த' கப்பல் 1250 பயணிகளுடன் 4 மணி நேரம் தாமதித்து நேற்று இரவு 7-45 மணிக்கே காங்கேசன்துறை முகத்தில் இருந்து திருமலைக்குப் புறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன்துறைமுகத் தில் இருந்து கப்பல் புறப்படுவதற்கு சில இடைஞ்சல் இருந்தமையால் பயணிகள் தெல்லிப்பழைதுர்க்காதேவஸ்

(8 ஆம் பக்கம் பார்க்க )

## மூவருக்கு விடுதலை

(வவுனியா)

பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த மூவர் வவுனியா மாவட்டமேல்நீதிமன்றநீதிபதியினால் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் இருவர்யாழ்ப்பாணத்தைச்சேர்ந்தவர்கள் என்றும் ஒருவர் வவுனியாவைச்சேர்ந்தவர் என்றும் தெரியவருகிறது. (4)

## யாழ்கல்வியியல் கல்லூரி 2001ம்ஆண்டுஅனுமதிக்கு ஜன9முதல்நேர்முகப்பரீட்சை

(கொழும்பு)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரிக்கு 2001ம் ஆண்டுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்குரிய நேர்முகப் பரீட்சை ஜனவரி மாதம் 9ம், 10ம், 11ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருப்பதாக யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியல் கல்லூரி பீடாதிபதி தி. கமலநாதன் நேற்று வலம்புரிக்கு தெரிவித்தார்.

இது தொடர்பா[illegible] அவர் மேலும் தெரிவிக்கையில்;

1997ம் 1998ம் ஆண்டு க.பொ.த உயர் தரப்பரீட்சையின்பெறுபேற்று அடிப்படையில்2001ம் கல்வி ஆண்டிற்கு

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## எட்டுக் கைதிகள் தெல்லிப்பழை முகாமிற்கு

(கொழும்பு)

பண்டாரவளைபிந்துனுவெவபுனர்வாழ்வு முகாமில்தடுத்துவைக்கப்பட்டிருந்த எட்டு பேரை தெல்லிப்பழையிலுள்ள புனர்வாழ்வு முகாமிற்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுதொ[illegible]ர்பான உத்தரவை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தேசிய இளைஞர்

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்தொலைத்தொடர்பு கோபுர நிர்மாணம் விரைவில்ஆரம்பிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடா நாட்டுக்கான தொலைத்தொடர்பு வசதிகளை மேலும் அதிகரிக்கும் நோக்குடன் பண்ணைப் பகுதியில் ரெலிக்கொம் பரிவர்த்தனைநிலையம் அமைந்துள்ள இடத்தில் 180 மீற்றர் நீளமான கோபுரம் அமைக்கும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

வ.கி.டாக்டர்களின் பயணத்திற்கு

## ஆறு அம்புலன்ஸ் வண்டி 10 லட்சம் ரூபா காப்புறுதி

(கொழும்பு

வடக்குக்கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் டாக்டர்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச்சங்க உதவியுடன் ஆறுஅம்புலன்ஸ் வண்டிகளை வழங்குவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

அத்துடன் சுமார் பத்துலட்சம்ரூபா காப்புறுதி வழங்குவதற்கும் சுகாதாரஅமைச்சு இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மேலும்நாலு அம்புலன்ஸ் வண்டிகள் வழங்குவதற்கும் சுகாதார அமைச்சு ஏற்பாடுகள் செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# ஜே. வி. பி. இன்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வில், நோர்வே அரசாங்கம் மேற்கொண்டுள்ள சமாதான முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, இன்று கொழும்பு லிப்ரன் சுற்றுவட்டத்தில் மாபெரும் ஆர்ப்பாட்டமொன்றை மக்கள் விடுதலை முன்னணி (ஜே வி. பி) நடாத்தவுள்ளது.

நோர்வேயின் சமாதான முயற்சிளுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து வரும் ஜே. வி. பி நாடு தழுவியரீதியாக மேற்கொள்ளவுள்ள ஆர்ப்பாட்ட நடவடிக்கையின்

(8 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகளை தவிர்க்கவும்

(பண்டாரவளை)

இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தை அரசாங்கம் நிறுத்தி, சிறுபான்மை இன மக்களுக்கு விரோதமாக கட்ட விழ்த்து விடப்பட்டுள்ள இனரீதியான வன்முறைகளையும்தாக்குதல் களையும் நிறுத்த வேண்டும்;

பெருந்தோட்ட சிவில் உரிமைகள் ஒன்றியம் மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு ஹற்றன் நகர சபை மண்டபத்தில் அண்மையில்நடத்திய கூட்டம் ஒன்றில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

அங்கு நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்களாவன;

நோர்வே அரசு இலங்கையில் இடம்பெற்று வரும் யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வருவதற்கான சமாதான முயற்சிகளுக்கு இலங்கை அரசும், பேரினவாதக் கட்சிகளும், பௌத்த அமைப்புக்களும் ஒன்று பட்டு இப்பேச்சு வார்த்தைக்கு ஆதரவளித்து இதன் மூலம் சமாதானத்தை ஏற்படுத்தமுன்வரவேண்டும்.

இக்கூட்டத்தில் மலையக தொழிற்சங்கங்கள், அரசியல். கட்சிகள், தொண்டர் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் இடம் பெற்ற படுகொலைகளை கண்டித்ததுடன் சர்வதேச ஆணைக்குழு நியமித்து இக் கொலைகள் சம்பந்தமாக பூரண விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும்குறிப்பிடத்தக்கது. (க-வி)

## சிறு விளம்பரம்

### வாங்க விற்க

உதிரிப் பாகங்களிற்காக ரி.வி. றேடியோ, டெக்குகள் வாங்கப்படும். ரி. வி. டெக், றேடியோ, மணிக்கூடுகள் திருத்தித்தரப்படும். அன்ரனா பொருத்தித்தரப்படும். வீனஸ் டெல்கா 140 கே. கே. எஸ் வீதி (சத்திரசந்தி முன்பாக) யாழ்ப்பாணம். T. P 2064

(1991)

## திருத்தும் பணி நிறைவு

(மல்லாகம்)

உடுவில் மான்ஸ் தமிழ் கலவன் பாடசாலையில் தரம் இரண்டிற்குரிய வகுப்பறை மற்றும் மல சல கூடம் என்பன திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி திருத்த வேலைகளுக்குரிய நிதியுதவியினை வலிகாமம் கல்வி வலயம் வழங்கியிருந்தமைகுறிப்பிடத்தக்கது. (ச-ப-14)

## ஊ. சே. நிதி திணைக்களம் கணக்கு கூற்றனுப்பியது

(கல்வயல்)

இலங்கை மத்திய வங்கி ஊழியர் சேமலாப நிதித் திணைக்களத்தால் நாட்டிலுள்ள சகல தொழில்வழங்குனர்களுக்கும் அவர்களிடம பணியாற்றும் ஊழியரின் 2000 ஆண்டு ஜனவரி முதல் ஜுன் மாதம் வரையான சேமலாப நிதிகள் சம்பந்தமான கணக்குக் கூற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அங்கத்தவராய் இருக்கும் ஊழியர்கள் தத்தமது தொழில் தருனரிடம் மேற்படி கணக்கைப் பார்வையிட்டு, வேறுபாடுகள் இருப்பின் தொழில் கொள்வோனூடாக ஆட்சேபனைகளை அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-111)

## க. பொ. த. (உயர்தரம்) மேலும் சில முடிவுகள்

அண்மையில் வெளியான க. பொ. த. (உயர்/தரம்) பரீட்சைமுடிவில்,

**யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி**

உயிரியல் பிரிவு

சு. பிறேம்குமார் பி, 2சி
யோ. கேதீசன் பி, 3சி
க சுதாகரன் பி, 3சி.

கணிதப் பிரிவு

சி. செந்தில்குகன் ஏ,பி,சி

வர்த்தகப் பிரிவு

சோ. பிரியாநந்தினி ஏ,2பி
ந. பிறேமகாந்தன் ஏ,2பி,சி
க. திலகேஸ்வரி ஏ,பி,2சி
லோ. சாமினி ஏ,பி,2சி

கலைப் பிரிவு

இ. டீபறஜனி ஏ,பி,சி
து. தயாளினி 3பி
இ. தயாநந்தினி 2பி,சி
உ. சுரேஸ்காந் ஏ,பி,சி
பொ. சத்தியப்பிரியா ஏ.பி,சி
கு. தாட்சாயினி ஏ,பி,சி

(ச - 57)

## தலைவர் வேண்டுகோள்

(சங்கானை)

மானிப்பாய் கோவில்பற்று வர்த்தக சங்கத்துக்கு உட்பட்ட அனைத்து வர்த்தக உரிமையாளர்களையும் இன்று மாலை 3 மணியளவில் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் ஒன்று கூடுமாறு வலி. தென்மேற்கு பிரதேசசபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன்ஜோன்சன் தெரிவித்துள்ளார். (ச-ப-16)


## தேவை

யாழ். கொமினிகேசன் சென்ரருக்கு

- ★ Telephone
- ★ Photo Copy
- ★ Laminator

இவற்றை இயக்கக்கூடிய முன்அனுபவம் உள்ளவர் தேவை.

**யாழ். கொமினிகேசன் சென்ரர்,**
இல. 442, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(2007)


## நன்றி நவில்கிறோம்

யா/தொழில் நுட்பக்கல்லூரி மாணவன் இ. சிறீரங்கநாதனின் விடுதலைக்காகஅயராது உழைத்த யா/மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான

**திரு. விநாயகமூர்த்தி அ. இ. தமிழ்க் காங்கிரஸ்**
**திரு. ஆனந்தசங்கரி த. வி. கூட்டணி**
**திரு. மாவை சேனாதிராசா த. வி. கூட்டணி**
**திரு. மகேஸ்வரன் ஐ. தே. கட்சி போன்றோர்க்கு**

எமது குடும்பத்தின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்து கொள்ளுகிறோம்.

செம்பாடு, வே. இராசையா
மந்துவில், கொடிகாமம். (2012)

## ஒளி விழா

(மல்லாகம்)

மயிலிட்டி றோ.க.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழாவும், ஒளி விழாவும் கடந்த சனிக்கிழமை 9 ஆம் திகதி பாடசாலை அதிபர் செ. அன்ரன் தலைமையில் இடம்பெற்றது. (உ-ப-14)

## பயண அனுமதி...

| | |
|---|---|
| 174069 ஏ | 174101 டி |
| 174101 ஏ | 174195 ஏ |
| 174101 சி | 174201 சி |
| 174011 ஈ | 174201 டி |
| 168497 ஏ | 108467 ஏ |

### நல்லூர்

| | |
|---|---|
| 144990 ஏ | 144990 பி |
| 145383 ஏ | 145552 ஏ |
| 156965 ஏ | |
| 157159 ஏ | 157564 ஏ |
| 157564 பி | 157564 சி |
| 157578 ஏ | 157578 பி |
| 167652 ஏ | 167652 பி |
| 167652 சி | 167744 ஏ |
| 167744 பி | 187744 சி |
| 167744 டி | 167745 ஏ |
| 167782 ஏ | 167782 பி |
| 167782 சி | 167786 ஏ |
| 167786 பி | 170649 ஏ |
| 170653 ஏ | 170910 ஏ |
| 171541 ஏ | 171543 ஏ |
| 171548 ஏ | 171618 ஏ |
| 171619 ஏ | 174043 ஏ |
| 174044 ஏ | 174048 ஏ |
| 174105 ஏ | 174105 பி |
| 174105 சி | 174110 ஏ |
| 174110 பி | 174131 ஏ |
| 174133 ஏ | 174133 பி |
| 174139 ஏ | 174145 ஏ |
| 174145 பி | 174145 சி |
| 174146 ஏ | 174147 ஏ |
| 174162 ஏ | 174162 பி |
| 174163 ஏ | 174163 பி |
| 174163 சி | 174182 ஏ |
| 144565 ஏ | 144565 பி |
| 144565 சி | 163397 ஏ |
| 166025 ஏ | 166025 பி |
| 166293 ஏ | 171856 ஏ |
| 171856 பி | |
| 171856 சி | 171856 டி |
| 171883 ஏ | 173452 ஏ |
| 173452 பி | 173499 ஏ |
| 173499 பி | 173499 சி |
| 173839 ஏ | 173839 பி |
| 173839 சி | 173849 டி |
| 176851 ஏ | 173851 பி |
| 173851 சி | 673546 ஏ |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 173041 ஏ | 173041 பி |
| 173041 சி | 133089 ஏ |
| 175122 ஏ | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 172855 ஏ | 172855 பி |

### உடுவில்

| | |
|---|---|
| 162780 ஏ | 162780 பி |
| 162876 ஏ | 162876 பி |
| 162876 சி | 167636 ஏ |
| 167636 பி | 167636 சி |
| 167707 ஏ | 173916 ஏ |
| 173921 ஏ | 173921 பி |
| 173952 ஏ | 173953 ஏ |
| 173953 பி | 173953 சி |
| 173955 ஏ | 173955 பி |
| 173955 சி | 174013 ஏ |
| 174046 ஏ | 174071 ஏ |
| 174071 பி | 174118 ஏ |
| 165532 ஏ | 165532 பி |
| 165532 சி | 165532 டி |
| 166683 ஏ | 166683 பி |
| 172824 ஏ | 172824 பி |
| 172824 சி | 172844 ஏ |
| 172903 ஏ | 173016 ஏ |

## இருவர் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் சந்தேகத்தின் பேரில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட இருவர் விடுவிக்கப்பட்டிருப்பதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

உடுவிலைச் சேர்ந்த பெனடிக்ற் யசீதரன் (வயது 21) தில்லை நடராஜா மோகன்ராஜ் (வயது 23) ஆகிய இருவருமே கடந்த 9 ஆம் திகதி உடுவில் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டுள்ளனர். (உ-12)

## பெண் விடுதலை

(யாழ்ப்பாணம்)

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கொக்குவில் பகுதியில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட தங்கராசா சகுந்தலாதேவி சட்டமா அதிபரின் உத்தரவை அடுத்து யாழ். நீதிமன்றத்தில் நீதிபதி மு. திருநாவுக்கரசு முன்னிலையில் கடந்த திங்களன்று விடுவிக்கப்பட்டுள்ளார். (உ-12)

## விபத்தில் காயம்

(மந்திகை)

யார்க்கரு இராணுவ முகாமருகே இடம்பெற்ற உழவு இயந்திர விபத்தில்அகப்பட்ட வரணி வாசி, காயமடைந்த நிலையில் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சின்னத்தம்பி செல்வராசா (வயது 31) என்பவரே காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-23)

## இராசி பலன்

13.12.2000
(கார்த்திகை 28. புதன்)
துதியை மு.ப. 11 40 வரை
திருவாதிரை மு.ப.9 05வரை
ராகு காலம் 12.21 -1.51
சுப நேரம் 4.51 - 6.21
சித்தம்

**மேடம்**
பிரயாணம், சகோதரர் உதவி, காரியம் கை கூடும், தன வரவு.

**இடபம்**
வாக்குக் கலகம், காரிய தாமதம், பொருள் விரயம், கௌரவக் குறைவு.

**மிதுனம்**
புதிய சிந்தனை, ஆரோக்கியம், சயன சுகம், நல்ல உணவு கிடைத்தல்.

**கடகம்**
பிரயாணம், காரிய தடங்கல் நித்திரைக் குழப்பம், உணர்ச்சி வசப்படல்.

**சிங்கம்**
தனலாபம், கீர்த்தி, குடும்ப சுகம், நினைத்த காரியம் கை கூடும்.

**கன்னி**
தொழில் மேன்மை, அதிகார நிலை, நிலைக்கேடு, காரிய நன்மை.

**துலாம்**
பிரயாணம், தந்தை வழி உறவு, கட்டுப்படுதல், வயிற்றுக் கோளாறு.

**விருச்சிகம்**
உஷ்ணரோகம், உறவினர் பகை, பிரயாண பயம், காரிய தாமதம்.

**தனுசு**
போசன சுகம், பிரயாணம், தன வரவு, செல்வாக்கு.

**மகரம்**
நோய்குணமடைதல், பகைவர் விலகுவர், தனவரவு, மனச்சந்தோசம்.

**கும்பம்**
குடும்பக் கவலை, காரிய தாமதம். வியாதி, சொத்துக்களால் இழுபறி.

**மீனம்**
தாய்வழி உறவு, தன்நம்பிக்கைக் குறைவு, பயந்த சுபாவம், முயற்சி தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

**வளவன்**

## பிரிவுத்துயர் பகிர்வு

### தங்கரத்தினம சிவலிங்கம்

சுன்னாகத்தைச் சேர்ந்த தங்கரத்தினம் சிவ்லிங்கம் 10 ஆம் திகதி வவுனியாவில் காலமானார்.

இறுதிக் கிரியைகள் நேற்று வவுனியாவில் நடைபெற்றன.

தகவல்:- **சகோதரர்கள்**

### திருமதி சிவலிங்கம் அன்னம்மா

அளவெட்டியைச் சேர்ந்த சிவலிங்கம் அன்னம்மா 11. 12. 2000 அன்று காலமானார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் நேற்று நடைபெற்றன.

தகவல்:- **சிவகரன்** (மகன்)

### கந்தையா சின்னத்தம்பி

சுதுமலை வடக்கைச் சேர்ந்த கந்தையா சின்னத்தம்பி 11 ஆம் திகதி சிவபதமெய்தினார்.

தகவல்:- **மனைவி**

### வயிரவநாதன் வேலுப்பிள்ளை

ஆவரங்காலைச் சேர்ந்த வயிரவநாதன் வேலுப்பிள்ளை 11. 12. 2000 அன்று காலமானார்.

தகவல்:- **மனைவி**

### தில்லையம்பலம் ஆறுமுகம்

காரைநகரை பிறப்பிடமாகவும் ஆறுகால்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் ஆறுமுகம் 11 ஆம் திகதி காலமானார்.

இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றன.

தகவல்:- **ஆ. நாகரத்தினம்** (மகன்)

பொதுசன நூலகம்

# யாழ்ப்பாணத்தில் தொடரும் இடப்பெயர் அவலம்

# கல்வி வாய்ப்பின்றி அலையும் இளம் சமுதாயம்

எந்த ஒரு சமுதாயத்தினதும் எதிர்காலம் பெரும்பாலும் இளைஞர்களின் கைகளில் தான் தங்கியுள்ளது. பெரியவர்களின் அனுபவமும், வழிகாட்டலும் அதற்கு இன்றியமையாதன. நாளைய சமூகத்தில் இளைஞர்களாகவும், பெரியவர்களாகவும் மிளிரப் போவது இன்றைய குழந்தைகளும், சிறுவர்களுமே.

எனவே நாளை எமது சமூகத்தை தீர்மானிக்கும்- வழி நடத்தும் இளைஞர்களும், பெரியவர்களும், நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் திகழ வேண்டுமாயின் இன்றைய எமது சிறார்கள் அதற்கேற்ப உருவாக்கப்பட வேண்டும். ஆனால் எமது இளம் சமூகத்தின் இன்றைய நிலை மிகவும் கவலைக்கிடமாகவே உள்ளது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன.

## யுத்தமும் இடப்பெயர்வும்

இன்று நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக சிறார்கள் பல வகையிலும் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக அண்மைக் கால போர் நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து, அகதி முகாம்களில் வாழும் குழந்தைகளையும், சிறுவர்களையும் பெரிதும் பாதிக்கின்றது.

குழந்தைகளைப் பொறுத்தவரையில் பொதுவாகவே தமிழ்க் குழந்தைகள் யுத்தத்தாலும்- அதன் பிரசவமான பொருளாதாரத் தடையாலும், போதியளவு போஷாக்கு இன்றி நலிவடைந்த நிலையில் காணப்படுகின்றனர். எனினும் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் அவ்வாறான சூழ்நிலை இல்லை எனலாம். இருப்பினும் யுத்தத்தின் சத்தங்கள் குழந்தைகளையும் பாதிப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது. அதேபோல சிறுவர்களை எடுத்துக் கொண்டால், வசதியான, நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களை விட- வறுமைக்கோட்டிற்குட்பட்ட, அதிலும் குறிப்பாக அகதி முகாம்களில் வசிக்கும் சிறுவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகவே உள்ளது.

## குடும்பநிலை

அண்மைக்கால யுத்த அனர்த்தங்களால் குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் இடம்பெயர்ந்து வடமராட்சி மற்றும் வலிகாமம் பகுதிகளில் உள்ள அகதி முகாம்களில் வசிக்கும் சிறார்களில் பெரும்பாலானவர்கள் பாடசாலைக்குச் செல்வதில்லை. செல்வதில்லை என்பதை விட செல்ல முடியாத நிலை என்பதே பொருத்தமாகும்.

வறுமைக் கோட்டிற்குட்பட்ட இவர்கள் தமது சொந்த இடங்களில் ஏதோ ஒருவாறு பாடசாலைக்குச் சென்று வந்தவர்கள், ஆனால் இடம் பெயர்விற்கு பின் இவர்களது பெற்றோர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்வதால் தமது பிள்ளைகளை மேற்கொண்டு படிப்பிக்க முடியாத நிலையிலுள்ளனர்.

சாதாரணமாக தமது ஊர்களிலேயே நாள் வேலை மற்றும் குடிசைக் கைத்தொழில்கள் மூலம் சீவியம் நடத்திய இம் மக்கள் தற்போது உழைப்புகளோ- வருமானங்களோ அற்ற நிலையில் அரசின் நிவாரண உதவிகளையே பெரிதும் நம்பியிருக்கின்றனர். அவை கூடப் போதுமானவையல்ல. இந்த நிலையில் தமது பிள்ளைகளைக் கல்வி நடவடிக்கைகளில் ஊக்குவிக்கவோ, ஈடுபடுத்தவோ அவர்களால் இயலுமானதன்று.

## வீண்பொழுது

இவ்வாறான சூழ்நிலையில் பாடசாலையோ பிற பயனுள்ள துறைகளோ இல்லாத நிலையில், இச் சிறார்கள் ''மாபிள்'' அடிப்பதிலும், பிற விளையாட்டுக்களிலும் வீணே பொழுதைக் கழிக்கின்றனர். இது இப்போதைக்கு அவர்களுக்கு மகிழ்வைத் தந்தாலும், அவர்களின் எதிர்காலம் எங்கே போகிறது என்பது கவலைக்குரியதும் அதேவேளை சிந்திக்கப்பட வேண்டியதுமாகும்.

**நா. துஷாந்**

## ஒழுக்கச் சீர்கேடுகள்

இது இவ்வாறு இருக்க தமது பசியைப் போக்கவும், பிற தேவைகளுக்காகவும் பிச்சை எடுக்கும் சிறார்களும் இன்னும் சற்று மேலே போய் பொய், திருட்டு, ஏமாற்றுக்களிலும் ஈடுபடும் ஒரு சில சிறுவர்களும் இருக்கவே செய்கின்றனர். இவர்களில் சிலர் பிடிபட்டுத் தண்டிக்கப்பட்டுமுள்ளனர். இதற்கு ஒரு சில பெற்றோரும் உடந்தையாக இருந்துள்ளமைவேறு விடயம். இத்தகைய விரும்பத்தகாத சம்பவங்கள் யாழ். மத்திய பஸ் நிலையத்தில் நடைபெற்று வருவதைப் பலரும் சுட்டிக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான சம்பவங்களை, சூழ் நிலையை காரணங்காட்டி, சிலரால் நியாயப்படுத்தப்படுகின்றபோதும் எதிர்காலத்தில் இச் சிறார்கள் சமூக சீர்கேடுகளிலும், வன்முறைகளிலும் ஈடுபட வழி சமைக்கும் என்பதை மறுப்பதற்கில்லை.

## தடுக்க வேண்டும்

எனவே எமது நாளைய சமுதாயம் சீர்கெடாமல் இன்னும் சிறப்பாக அமைய வேண்டுமாயின் இவ்வாறான சீர்கேடுகளுக்கு முற்றுப்புள்ளி இடவேண்டும். இதற்கு ஒவ்வொரு இளைஞனும், யுவதியும், பெரியோரும் பாடுபட வேண்டும். அத்துடன் இவற்றிற்குக் களம் அமைத்துக் கொடுக்க அரச- அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமய, சமூகத் தொண்டு நிறுவனங்கள் முன் வரவேண்டும். இவர்கள் முன்வரும் பட்சத்தில் இத்தகைய சீர்கேடுகளை தடுக்க முடியும்,

## சத்துணவுத் திட்டம்

வன்னி, மற்றும் வவுனியாவில் உள்ளது போன்று இலைக்கஞ்சித் திட்டம் முதலான சத்துணவுத் திட்டங்களின் மூலம் முகாம்களில் உள்ள சிறார்களை ஊக்குவித்து கல்வி மற்றும் நற்பண்புகளைப் புகட்டலாம்.

## பொதுக்கல்வி நிலையம்

இத திட்டங்களின் மூலம் முகாம்கள் தோறும் பொதுக் கல்வி நிலையங்களை நிறுவிப் பாடசாலைக்குச் செல்ல முடியாத சிறார்களை நல்வழிப்படுத்தலாம். இதனால் முகாம்களில் உள்ள படித்த இளைஞர், யுவதிகளும் தமது பங்களிப்புகளை வழங்கித் தாமும் பயன்பெற முடியும். எனவே இதற்கு முதலில் மேற்படி நிறுவனங்கள் முன்வர வேண்டும். அதே போன்று முகாம்களில் இருப்போரும் எப்போது போர் ஓயும்? எப்போது எம் ஊர் போவது என்ற சிந்தனைகளை- ஏக்கத்தை இறைவனிடம் விட்டு விட்டு முகாம்களில் இருக்கும் வரை தமது பிள்ளைகளை நல்வழிப்படுத்தும் இத் திட்டத்திற்கு ஒத்துழைக்க வேண்டும்.

## உதவிகள் தேவை

எனவே எமது எதிர்காலச் சந்ததியின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்குமான இப் புனித கைங்கரித்திற்கு- ஏழைக்கு எழுத்தறிவிக்கும் புனிதப் பணிக்கு இவர்கள் முன் வருவார்களேயானால் செல்வந்தர்கள், வர்த்தகர்கள், பரோபகாரிகள் எனப் பலரும் கைகொடுத்து உதவுவார்கள். முதலில் இத் திட்டத்தை முன்னெடுக்க சமய- சமூக நிறுவனங்கள் முன்வர வேண்டும். செய்வார்களா?

---

### யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் மீறல்

# அமைப்புகள் இல்லாமல் இருப்பது பெரும் குறைபாடான ஒன்றே

(தென்மராட்சி)

யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் மீறல் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குரிய அமைப்பு ஒன்று இல்லாமல் இருப்பது பெரும் பின்னடைவாக இருப்பதாக கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பலராலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 1983ம் ஆண்டு முதல் மனிதஉரிமைகள் இல்லம் என்ற பெயரில் மனித உரிமைகள் அமைப்பு ஒன்று வெற்றிகரமாகச் செயல்பட்டு வந்தபோதிலும் கூட அதன் செயற்பாடுகள் ஒரு தசாப்தத்தின் பின்னர் பல்வேறு காரணங்களினால் இடை நிறுத்தப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்து மக்களின் நன்மை கருதி விரைவாக மனித உரிமைகள் அமைப்பு ஒன்றினை அங்குரார்ப்பணம் செய்வது பற்றி யாழ்ப்பாணத்தில் சட்டத்துறையில் ஈடுபடுகின்ற பிரமுகர்கள் முயற்சித்து வருவதாகத் தெரியவருகின்றது.

அதேவேளை, யாழ்ப்பாணத்தில் ஆவணப்படுத்தல் பணிகளும் நீண்டகாலமாக வெற்றிடமாகவே இருந்து வருவது பற்றியும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(க-77)

### மக்கள் இடம் பெயர்ந்தபகுதிகளில்

# நாய்கள் பெருக்கம் வீடு செல்வோர் அச்சம்

(ஈச்சமோட்டை)

மக்கள் இடம்பெயர்ந்த பகுதிகளில் குட்டை நாய்களின் பெருக்கம் அதிகரித்திருப்பதால் அங்கு செல்லும் பொதுமக்கள் பெரிதும்சிரமத்திற்குள்ளாவதாக அறியப்படுகிறது.

முன்பு வீடுகளில் செல்லப் பிராணிகளாக வளர்க்கப்பட்ட இந்நாய்கள், எஜமானர்கள் வேறிடம் சென்றுவிட்டதனால், இந் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறன.

அத்துடன் இவை பசிக் கொடுமையினால், அங்கு செல்லும் பொதுமக்களை கடிக்க முயல்வதாகவும், அவர்களை துரத்தி வருவதாகவும் இதனால் பலர் தத்தம் வீடுகளைச் சென்று பார்வையிட்டு வர அச்சம் தெரிவித்து வருவதாகவும் தெரியவத்துள்ளது.

(உ-59)

## தாக்குதல் முறியடிப்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் எல்லையில் அமைந்துள்ள அரந்தலாவை பொலிஸ் காப்பாளர்கள் மீது கடந்த வெள்ளி அதிகாலை 4.30 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய மோட்டார் தாக்குதல் முறியடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் பொலிஸாருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன, (க-108)

## துடிப்பு சஞ்சிகை வெளியீடு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் பாண்டியன் தாழ்வுபுனித அன்னாள் ஆலய இளைஞர்களும் கொய்யாத் தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலய இளைஞர்களும் இணைந்து வெளியிடும் ''துடிப்பு'' சஞ்சிகையின் செப்ரெம்பர், ஒக்ரோபர்மாத இதழ்கள்மன்றத்தால் வெளியிடப்பட்டுள்ளது. (உ - 59)

## நத்தாரை முன்னிட்டு நிதியுதவி

(மந்திகை)

நத்தார் தின நிகழ்வுகளை முன்னிட்டு செவிப் புலனற்றோர் புனர்வாழ்வு நிறுவனம் கைதடி நவீல்ட் விழிப் புலனற்றோர் பாடசாலை என்பனவற்றுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நிதி உதவியினை கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-32)

## கல்விக் கண்காட்சி

யாழ். அச்சுவேலி மகா வித்தியாலய ஆரம்ப பிரிவு மாணவர்களின் கல்விக் கண்காட்சி அண்மையில் நடைபெற்றது. (உ-57)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

டிசம்பர் மாதம் 11ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 172842 ஏ | 172996 ஏ |
| 172996 பி | 172996 சி |
| 172996 டி | |

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 150893 ஏ | 150893 பி |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 152648 ஏ | 161320 ஏ |
| 161320 பி | 161320 சி |
| 161320 டி | 166423 ஏ |
| 166423 பி | 168535 ஏ |
| 168535 பி | 168556 ஏ |
| 168556 பி | 168556 சி |
| 168556 டி | 168556 ஈ |
| 168571 ஏ | 168576 ஏ |
| 168684 ஏ | 168684 பி |
| 168825 ஏ | 168825 பி |
| 168825 சி | 168825 டி |
| 168913 ஏ | 171695 ஏ |
| 171695 பி | 171755 ஏ |
| 171857 ஏ | 171871 ஏ |
| 171871 பி | 171881 ஏ |
| 171881 பி | 171881 சி |
| 171911 ஏ | 171911 பி |
| 171911 சி | 171915 ஏ |
| 171920 ஏ | 171926 ஏ |
| 171932 ஏ | 171942 ஏ |
| 171968 ஏ | 171985 ஏ |
| 171988 ஏ | 171988 பி |
| 171988 சி | 172001 ஏ |
| 172001 பி | 172003 ஏ |
| 172003 பி | 172003 சி |
| 172042 ஏ | 172042 பி |
| 172051 ஏ | 172051 பி |
| 172051 சி | 172051 டி |
| 172058 ஏ | 172107 ஏ |
| 172134 ஏ | 172134 பி |
| 172134 சி | 172136 ஏ |
| 173378 ஏ | 173414 ஏ |
| 173414 பி | 173446 ஏ |
| 173459 ஏ | 173466 பி |
| 173468 ஏ | 173468 பி |
| 173490 ஏ | 173561 ஏ |
| 173561 பி | 173561 சி |
| 173595 ஏ | 173595 பி |
| 173595 சி | 173629 ஏ |
| 173631 ஏ | 173721 ஏ |
| 173744 ஏ | 173753 ஏ |
| 173805 ஏ | 173805 பி |
| 173806 ஏ | 173832 ஏ |
| 173832 பி | 173834 ஏ |
| 173840 ஏ | 173840 பி |
| 173840 சி | 173859 ஏ |
| 173859 பி | 173868 ஏ |
| 173868 பி | 175274 ஏ |
| 175275 ஏ | 175282 ஏ |
| 175282 பி | 175312 ஏ |
| 175349 ஏ | 175358 ஏ |
| 175359 ஏ | 175377 ஏ |
| 175389 ஏ | 178881 டி |

### கரவெட்டி

| | |
|---|---|
| 168634 ஏ | 168634 பி |

### கோப்பாய்

| | |
|---|---|
| 144993 ஏ | 144993 பி |
| 159620 ஏ | 162629 ஏ |
| 162629 பி | 166946 ஏ |
| | 166957 ஏ |
| 166946 பி | 166957 பி |
| 166975 ஏ | 166975 பி |
| 166975 சி | 166975 டி |
| 166975 ஈ | 166989 ஏ |
| 166989 பி | 167090 ஏ |
| 167090 பி | 167090 சி |
| 167695 ஏ | 168216 ஏ |
| 168217 ஏ | 168217 பி |
| 168262 ஏ | 168271 ஏ |
| 168271 பி | 168316 ஏ |
| 168316 பி | 168316 சி |
| 168316 டி | |
| 168326 ஈ | 168213 ஏ |
| 168334 ஏ | 170416 ஏ |
| 168334 பி | 170461 ஏ |
| 170461 ஏ | 170448 பி |
| 170468 ஏ | 170468 பி |
| 170468 சி | 170553 ஏ |
| 170518 ஏ | 170632 ஏ |
| 170620 ஏ | 173320 டி |
| 170634 ஏ | 173961 சி |
| 173361 ஏ | 173920 ஏ |
| 173969 ஏ | 173969 பி |
| 173969 ஏ | 173071 ஏ |
| 173969 ஏ | 173978 பி |
| 173979 சி | 173979 பி |
| 173978 ஏ | 173980 பி |
| 173979 ஏ | 173993 ஏ |
| 173980 ஏ | 174012 ஏ |
| 173987 ஏ | 174079 ஏ |
| 173993 பி | 174101 பி |

(2ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் கட்டுப்பாட்டின் கீழ்

# யாழ். குடாநாடு வந்தபின் இடம்பெற்ற

# மனித உரிமை மீறல்கள் பற்றி விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாடு இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்ட பின்பு இடம் பெற்ற இராணுவத்தின் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

இச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்துமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர்,

இந்திய இராணுவத்தின் காலத்தில்இடம்பெற்றமனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக தனக்குத் தெரிந்த வரை விசாரணைகள் நடைபெறமாட்டாது என்றும் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும், யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் நடைபெற்றுள்ளன. சம்பவங்களுடன் தொடர்புடைய அனேகமானவர்களுக்கு தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் பல விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. போதிய சாட்சியங்கள் இன்மை, முறைப்பாட்டாளர்கள் சமூகம் தராமை போன்ற காரணங்களினால் இந்த விசாரணைகளில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் சில விசாரணைகள் முடிவடையவில்லை.

இத்தகைய விசாரணைகளை முன்னுரிமைஅடிப்படையில் மேற்கொள்ளுமாறு குற்றப் புலனாய்வுத் துறையினருக்கும் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்

(க)

## புனரமைப்பு

இவ்வருடம் ஒதுக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியின் கீழ், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பின்வரும் புனரமைப்பு வேலைத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

புனித சின்னப்பர் தேவாலயம் நல்லூர் சிவன் கோவில், கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம், கனகரத்தினம் மகாவித்தியாலயம், கோண்டாவில் இந்துமகா வித்தியாலயம், நல்லூர் பெண்டிக் றோ. க. த. க. பாடசாலை, ஆனைப்பந்தி மெ. மி. வித்தியாலயம், கலட்டி மெ. மி த.க வித்தியாலயம், கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலயம், இல்னர் வேன் மெ.மி.த.க வித்தியாலயம், அரியாலை சாந்தி ச.ச. நிலையம் ஆகியவை புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன.

(உ-02)

## அமைச்சர் டக்ளஸிற்கு அவசர மகஜர்

(மல்லாகம்)

உடுவில் மான்ஸ் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு விளையாட்டு மைதானம் இல்லாத நிலையை சுட்டிக்காட்டும் அவசர மகஜர் ஒன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு அனுப்பப் பட்டுள்ளது

அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

மாணாக்கரதுகற்றல்செயற்பாட்டில் விளையாட்டும் பிரதான பங்கு வகிக்கிறது. இந்நிலையில் பாடசாலையில் விளையாட்டு மைதானம் இன்மை மாணாக்கரின் உடற் கல்வியை மட்டுமன்றி கற்றற் திறனையும் மழுங்கடிக்கச் செய்ய ஏதுவாகும்.

மேற்படி பாடசாலையில் உடற்கல்விச் செயற்பாட்டை முன்னெடுப்பதற்குரிய ஆசிரியர்கள் இருந்து அதற்குரிய மைதானம் இல்லாமைபெருங் குறைபாடாக உள்ளது.

அதேவேளை நலன் விரும்பிகள் எவரேனும் முன்வந்து பாடசாலைக்குரிய மைதானத்தைப் பெற்றுத் தரின் தாம் மிகுந்த நன்றியுடையவர்களாய் இருப்போம் எனவும் தெரிவித்துள்ளனர்.

(ச-ப- 4)

## நூல் அறிமுகம்

# கற்றோர் மத்தியில் ஏற்றம் பெறும் அற்புத கருத்துக்குவியல் 'தாரகை'

யா/உரும்பிராய் றோமன் கத்தோலிக்க பாடசாலையின் வெளியீடான ''தாரகை'' சஞ்சிகை பல்வேறு தரமான அம்சங்களுடன் வெளி வந்திருப்பது கல்வி ஆர்வலர்கள் அனைவருக்கும் பெருவிருந்தாக அமைந்துள்ளது என்று குறிப்பிடுதல் முற்றிலும் பொருத்தமானதே.

பாடசாலை சின்னத்துடன் கூடிய மாணவர்கள், ஆசிரியர்களை இணைத்து இயற்கை எழில் கொஞ்சும் பாடசாலையின் முன்பக்க தோற்றம் இதழின் முன்பக்கத்தை அணி செய்வது கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாகவே அமைகிறது.

கல்லூரி அதிபர் மு.விக்கினேஸ்வரனின் ஆசிச் செய்தியுடன் அறிஞர் பெருமக்களின் வாழ்த்துரைகள் சஞ்சிகையின் நுழைவாயிலில் அமைந்திருப்பது பொருத்தமானதே.

'இதயக் கண்ணாடிகளை உடைய விடலாமா' என்ற அர்த்தம் பொதிந்த கட்டுரை மாணவ மணிகளின் எண்ணங்கள், சிந்தனைகள் வளர்த்தெடுக்கப்படவேண்டியதும் அவற்றை சிதைக்கும் எந்த ஒரு செயற்பாட்டிலும் யாரும் ஈடுபடக் கூடாது என இடித்துரைக்கும் முறையும் சிலாகிக்கத்தக்கன.

'ஈழத் தாய் நாடே' என்னும் தலைப்பிலான கவிதை தாய் நாட்டின் பெருமையை தத்ரூபமாக வெளியிட்டிருப்பது மாணவச் செல்வங்களிற்கு அருவிருந்து என்றே கொள்ளமுடிகிறது.

'புதிய கல்விச் சீர்திருத்தமும் கிராமப்புறப் பாடசாலைகளும்' என்ற தலைப்பில் அதிபரின் கட்டுரையானது புதிய கல்விச்சீர்திருத்தத்தின் தன்மை பற்றியும்,

**நீர்வையூரான்**

கிராமப்புறப் பாடசாலைகள் ஏனைய உயர்தர பாடசாலைகள் போல கவனிக்கப்படாது மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தப்படுவதனை வெகு நசுக்காக சாடியுள்ளது நயக்கத்தக்கது.

மேலும் கிராமப்புறப்பாடசாலைகளின் கல்விசார் வளர்ச்சியில், பாடசாலை அபிவிருத்தியில் அரசு மட்டுமல்ல தனவந்தர்கள், கிராம பெரியோர்களும் தம்பங்களிப்பை நல்க வேண்டும் என்று குறிப்பிட்டிருப்பது மெச்சத்தக்கது.

ஓர் ஏழையின் குமுறல், 'ஆரம்பக் கல்வியும் புதிய கல்விச் சீர்திருத்தமும்' போன்ற கட்டுரைகள் சிந்தனையை தூண்டுவனவாக அமைந்துள்ளன.

மேலும் 'விருந்தும் காந்தி அடிகளும்' என்ற தலைப்பிலான சிந்தனை துணுக்கு, சிந்தனை சிதறல்கள், மாணவ சிறார்களின் ஆக்கங்களான 'கவிதை', சவ்வரிசி, காகமும் நாயும் கதை உட்பட பல அர்த்தம் பொதிந்த அம்சங்கள் நூலில் பொதிந்துள்ளன.

எமது நாட்டைப் பற்றி அறிந்து கொள்வோம் என்ற தலையங்கத்திலான தொகுப்பு குறிப்பிடக்கூடிய ஒன்று.

பாடசாலை - சமூக உறவினூடு வளமான எதிர்காலத்திற்கு ஆரம்பக் கல்வியே அத்திவாரம் என்ற தலைப்பிலான அர்த்தம் பொதிந்த கட்டுரை சஞ்சிகைக்கு மேலும் கனதியை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் ஆங்கில நடையிலான உரையாடல், சிறு. சிறு ஆக்கங்கள் மாணவ மணிகளின் ஆங்கில அறிவிற்கு கட்டியம் கூறுவனவாக அமைந்துள்ளன.

மொத்தத்தில் அர்த்தம் உள்ள பல்வேறு தரமான அம்சங்களுடன் வெளியிடப்பட்ட 'தாரகை' சஞ்சிகை கற்றோர் மத்தியில் நல்லதோர் வரவேற்பை பெறும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

(க)

# செய்தித் துளிகள்

## வலயக் கல்வி பணிப்பாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஏனைய வலயங்களில் இருந்து இடம்பெயர்ந்து, யாழ்ப்பாண வலயத்தில் தரம்-09 இல் கல்விகற்ற மாணவர்களுக்குரிய பரீட்சைப் புள்ளிகளையும், கணிப்பீட்டுப் புள்ளிகளையும் உடனடியாக குறிப்பிட்ட மாணவன்/மாணவிக்குரிய வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறு யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் சம்பந்தப்பட்ட அதிபர்களைக் கேட்டுள்ளார்.

இவ்வாறே ஏனைய வலயங்களில் தற்காலிகமாக இணைந்து கல்வி கற்கும் யாழ்ப்பாண வலயத்திற்குரிய மாணவர்களது பரீட்சைப் புள்ளிகளையும் உடனடியாக அனுப்பி வைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (உ)

## இன்று நடமாடும் சேவை

கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் இரண்டாவது நடமாடும்சேவை இன்று புதன் கிழமை காலை 9.00மணிக்கு துன்னாலை காசிநாதர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

துன்னாலை தெற்கு, துன்னாலைமேற்கு, துன்னாலை மத்தி, துன்னாலைகிழக்கு, கரவெட்டிகிழக்கு, கட்டைவேலி ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள பொதுமக்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறைபாடுகள் தொடர்பாக இந்நடமாடும் சேவையில் தெரிவிக்கலாமென பிரதேச செயலர் எஸ். ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் கல்வி, சுகாதார, விவசாய சனசமூக அபிவிருத்தி, வீதிஅபிவிருத்தி, அஞ்சல்துறை, மின் அரச சபை, போக்குவரத்துசபை, மதுவரி திணைக்களம், கால் நடைவைத்தியநிலையம், இலங்கைமக்கள்வங்கி, கூட்டுறவுச்சங்கம் பிரதேச சபை ஆகியவற்றின் முக்கிய அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர் (உ-23)

## இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த செல்லம் செல்ல ஜெகன் (வயது 19) இணுவில், தியேட்டர் லேனைச் சேர்ந்த பொன்னுத்துரை ரமேஸ் (வயது 23) ஆகியோர் கடந்த 7 ஆம், 8ஆம் திகதிகளில் ஊரெழுஇராணுவத்தினரால் கைது செய்யப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(உ-12)

## மீனவர்களின் உபகரணங்கள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை மண்டைதீவில் வைத்து கடற்படையினரால் சாவற்காட்டு மீனவர் 17 பேரின் வலைகள், வள்ளங்கள், அடையாளஅட்டைகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர் கே. வி. குகேந்திரன் அவர்கள் கடற்படை அதிகாரியுடன் தொடர்புகொண்டதை அடுத்து இந்தப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வின்போது ஈ. பி. டி. பி. சார்பில் நெப்போலியன் மற்றும் றீகன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (உ-5)

## நோன்பு பூசை

(துன்னாலை)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் மார்கழி மாதத்துக்கான நோன்புப் பூசை எதிர்வரும் 16ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி பூசை காலை5.30 மணிக்குச் சுப்ரபாதத்துடன் ஆரம்பமாகும். ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 5.00 மணிக்குப் பூசை ஆரம்பிக்கும் என ஆலய கரும பீடத்தினர் தெரிவித்துள்ளனர். (ச-41)

## கலாசார பேரவை

(மந்திகை)

வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச செயலர் பிரிவிற்கான கலாசாரப் பேரவை அங்குரார்ப்பண வைபவம் அண்மையில் நடைபெற்றது.

பிரதேச செயலர்செ. ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்ற மேற்படிவைபவத்தில் 24 பேரை உள்ளடக்கிய நிர்வாக சபை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

(ச-23)

## கொக்குவிலில் சோதனை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில்கிழக்குகோவில் வீதியை அண்டிய பகுதிகளில் நேற்றுமுன்தினம் மாலை படையினர்திடீர் சோதனைகளை மேற்கொண்டனர்.

இதன் போது பொருட்கள் கைப்பைகள் மற்றும் மூடைகள் என பலவற்றையும் தீவிர சோதனைக்கு உட்படுத்தினர். (வ-5)

## இணுவிலில் சிறுவர்தின விழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி கோயில் இளம் தொண்டர் சபையின் பாலர் பாடசாலை சிறுவர் தினவிழா கடந்த 10 ஆம் திகதி மாலை 3.மணியளவில் மேற்படி ஆலயமண்டபத்தில் இடம்பெற்றது.

கிருபாகரன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி வைபவத்தில் சிறுவர்களின் கலை திறமைகளை வெளிக்கொணரும் பல நிகழ்வுகள் இடம்பெற்றன.

80 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மல்லாகம் நீதிமன்ற முதலியார் ச.தட்சனாமூர்த்தி பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (க-12)

## ஆரையம்பதி இளைஞன் மரணம் மூவர் கைதாகினர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேசத்தை சேர்ந்த பரமேஸ்வரன் யுகேந்திரனின் மரணம் தொடர்பாக அப்பகுதி முன்னாள் ரெலோ பொறுப்பாளர் உட்பட மூவர் நேற்று காத்தான் குடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சீனிதம்பி ரஞ்சன் மற்றும் அவரது சகோதரர்களான சீனித்தம்பி கோகுலராஜ், சீனித்தம்பி உதயராஜ் ஆகியோரும் சவரிமுத்து மதிவதனன் என்பவரும் கைது செய்யப்பட்டவர்களாவர்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது;

பிரஸ்தாப நபரை ரெலோ உறுப்பினர்கள் சிகரெட் வாங்க அனுப்பியதாகவும், அவர் சற்று தாமதமாக வந்ததனால் ஆத்திரமுற்று அவரைத் தாக்கியதாகவும், அதனாலேயே மரணம் சம்பவித்ததெனவும் தெரிவிக்கப் படுகிறது.

(இ)

## முன்பள்ளிக்கு கற்பித்தல் உபகரணங்கள

நீர்வேலி மத்தி ஸ்ரீகணேசா முன்பள்ளிக்கு யுனிசெப் நிறுவனத்தினால் அண்மையில். ஒரு தொகுதி கற்பித்தல் உபரணங்களுடன் கூடிய விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டன. (உ)

## இன்று ஒரு தகவல்

# இழி குணம் உயர் வெய்தாது

ஒரு காட்டில் சாந்தானந்தர் என்ற ஒரு தபோதனர் தவஞ் செய்து கொண்டிருந்தார். அக்காட்டிலுள்ள சகல விலங்குகளும் அவரிடம் குழந்தைகள் தகப்பனாரிடம் வந்து மரியாதைகாட்டுவது போல் தினம் காலையில் வந்து வணங்கி விட்டுப் போகும். அம்முனிவரிடம் யானையும் வரும், பூனையும் வரும், எலியும் வரும், புலியும் வரும், நரியும் வரும், பரியும் வரும், வண்டும் வரும், நண்டும் வரும். ஒருபலவீனமான நாய், அதன் உடம்பில்பலபுண்கள். அச் சொறி நாய் அம்முனிவரிடமேவளைந்து வளைந்து சுற்றிக்கொண்டிருக்கும். ஒரு நாள் இந்த நாயைக் கொல்ல ஒரு ஓநாய் வந்தது. சொறி நாய் நடுங்கி நடுங்கி முனிவரைத் தஞ்சம் புகுந்தது. முனிவர் பெருமான்கமண்டல நீரைத் தெளித்து, ''நீயும் ஓநாயாக ஆகக்கடவது'' என்றார். உடனே சொறி நாய் ஓநாயாக மாறியது. இந்த ஓநாய் வந்த ஓநாயை விரட்டி விட்டது.

மற்றொரு நாள் இந்த ஓநாயைக் கொல்லச் சிறுத்தைப்புலிவந்தது. ஓநாய் முனிவரைத்தஞ்சம் புகுந்தது முனிவர் கமண்டல நீரைத் தெளித்து அதைச் சிறுத்தைப் புலியாக மாற்றி விட்டார். இச்சிறுத்தைஅச்சிறுத்தையை விரட்டி விட்டது. பின்னர் அது சிறுத்தைப் புலியாகவே கம்பீரமாகக் காட்டில் உலாவியது. ஒரு நாள் சிறுத்தைப் புலியை ஒரு யானை கொல்ல வந்தது. சிறுத்தைமுனிவரைத் தஞ்சம் புகுந்தது கருணை நிறைந்த முனிவர் கமண்டல நீரைத் தெளித்து அதனை யானையாகமாற்றிவிட்டார்.

வேறொரு நாள் இந்த யானையைக் கொல்ல வேங்கைப் புலிபாய்ந்து வந்தது. யானை முனிவரிடம் அடைக்கலம் புகுந்தது. உடனேதவசிலர்அதனைவேங்கைப்புலியாகமாற்றிவிட்டார். அதுவேங்கையாக உலாவியது. இன்னும் ஒரு நாள் இந்தவேங்கையைக் கொல்லச் சிங்கம் வந்தது. வேங்கை முனிவரைத் தஞ்சம் புகுந்தது முனிவர் அதனைச் சிங்கமாகச் மாற்றிவிட்டார். வந்த சிங்கத்தை இந்தச் சிங்கம் விரட்டி விட்டது. புதிய சிங்கம் அக்காடு முழுவதும் உலாவியது. மிருகராஜாவான சிங்கம் அக்காட்டில் பெருமிதமாக வாழ்ந்தது.

ஒரு நாள் அது தனக்குள் சிந்தித்து, முனிவர் கருணை மிகுந்தவர். சொறி நாயாகிய நம்மை மிருக வேந்தனாகச் செய்தார், ஒரு வேளை அவர் என்னைப் பழைய படி நாயாகச் செய்தாலும் செய்யக் கூடும். அவரிடம் கமண்டல நீர் இருக்கிறது. அன்றி வேறு சிறிய பிராணியைச் சிங்கமாகவும் செய்யக்கூடும். நான்என்றும் சிங்மாக இருக்க வேண்டுமாயின் முனிவர் இருக்கக் கூடாது ஆதலால் அவரைக் கொன்று தின்றுவிடவேண்டும் என்று முடிவு செய்தது.

முனிவர் கண்மூடி நிஷ்டையில் இருக்கும் போது, அசிங்கமுள்ள அச்சிங்கம் அவரை கொல்லப் பின் புறமாக வந்தது. எல்லாம் அறிந்த அந்த மாதவ முனிவர் புன்னகை செய்து, ''நீ இப்படிஆனாயே, வாநாயே'' என்றார். அந்த வினாடியே அது சொறி நாயாக ஆகி விட்டது.

முனிவர் ''நாயே உன்மீது பிழை இல்லை உன்னை உயர் பதவியில் வைத்த என் மீது தான் பிழை. இழிந்த குணமுள்ளவனை உயர்ந்த பதவியில் வைத்தால் இழிவான புத்தி தானே இருக்கும்'' என்றார். நாய் தன் அறிவின்மையை நினைந்துதுயருற்றது.

நன்றி

அறநெறி

# இலங்கை தமிழர்கள் அனுபவிக்கும் இன்னல் தீர்க்க உதவுக!

## ஐ. நா. செயலருக்கு அவசர மகஜர்

(கொழும்பு)

இலங்கைத் தமிழ் மக்கள் கடந்த இருபதாண்டு காலமாக அனுபவித்துவரும் இன்னல்களை நீக்க, சுபீட்சமான நிம்மதியான வாழ்வை பெற உதவுமாறு கோரும் மனுவொன்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் கோபி அனானுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஒன்பது அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர்களால் கூட்டாக ஒப்பமிடப்பட்டு நேற்று முன் தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அம்மனுவில்,

கடந்த இருபதாண்டுகளாக நாட்டை ஆட்சிசெய்து வரும் அரசாங்கங்கள், தமிழ் மக்களின் அரசியல் மற்றும் குடியுரிமைகளை மறுத்தும் பறித்தும் வருகின்றனர்.

அத்துடன் தமிழ்மக்களை இரண்டாந்தர பிரஜைகளாக மதித்து பாரபட்சம் காட்டுகின்றன.

தொடரும் யுத்தப் பாதிப்புக்கள் மாணவர்கள் மத்தியில் உளவியல் ரீதியான தாக்கத்தை உண்டுபண்ணி கல்வியில் அக்கறை செலுத்த முடியாத நிலையை ஏற்படுத்துகின்றது.

பாடசாலைகளுக்கு அருகில் இராணுவக் காவலரண்கள் அமைந்துள்ளதனால் மாணவர்களை [illegible]டுவதுடன் உயிராபத்துக்கள் ஏற்படவும் வகைசெய்கிறது.

சுதந்திரமாக தொழில் முயற்சிகளில் ஈடுபட முடியாத தன்மைகளும் எதேச்சையான கைதுகளும், சித்திரவதைகளும் அதிகரித்துள்ளன எனவும்,

அத்தகைய அவலங்களைப் போக்கி அமைதி வாழ்வை பெற்றுத்தர உதவுமாறும் அம்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## நிரந்தரக் கடிதம்

(இருபாலை)

கோப்பாய் பிரதேச செயலகத்தில் அண்மையில் சமுர்த்தி உத்தியோகஸ்தர்களாக நியமனம் பெற்றவர்களுக்கான, நிரந்தரநியமனக் கடிதங்கள் நேற்று வலிகிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கம், உபதலைவர் யு. எல். ஏ. ஏவி ஆகியோரினால் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது. (இ)

## வீடமைப்பு நிதி

(மல்லாகம்)

வலி தெற்குப் பிரதேசசெயலகப் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் மக்களுக்கு வீடமைப்பு நிதியாக ரூபா 25 000 வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த வீடுகளுக்கே மேற்படி கடனுதவி வழங்கப்படுகின்றது.

இதன் முதற்கட்டமாக 162 பேருக்கு தலா ரூபா 10 000 வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நிதியுதவியை இதுவரை பெறாதவர்கள் பிரதேச செயலருடன் தொடர்பு கொண்டு இவ்வருட முடிவினுள் பெற்றுக் கொள்ளுமாறு வலி தெற்குப் பிரதேச செயலக அலுவலர் சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார். (ச-ப-14)

## ஜெனரேற்றர் அன்பளிப்பு

(மந்திகை)

வடமராட்சி வலய கல்வித் திணைக்களத்திற்கு உயர் வலுக்கொண்ட ஜெனரேற்றர் (மின்பிறப்பாக்கி) ஒன்று ஈ.பி.டி.பிஅமைப்பின் பிரதம அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரனால் வலயக் கல்வித் திணைக்கள அதிகாரிகளிடம் அண்மையில் கையளிக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வில், பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் பரஞ்சோதி ரவீந்திரன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

[ச-23]

# மல்லாகம் பகுதியில் கடனை மீள செலுத்தாதோருக்கு எதிராக வழக்குத்தாக்கல்

### அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் நீதி நிர்வாக வலயத்திற்குட்பட்ட பகுதிகளில் வசித்த வறிய விவசாயிகளின் நன்மைகருதி அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் வழங்கிய வட்டியில்லாக் கடன்களை மீளச் செலுத்தாதவர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுமார் 50 பேருக்கு எதிராக தொடுக்கப்பட்ட இவ் வழக்கில் 20 பேரின் வழக்குகள் தீர்க்கப் பட்டுள்ளதாகவும் அவர்களில் பெரும்பாலனோர் கடன்களை திருப்பி செலுத்தியுள்ளனர் என்றும் தெரியவருகிறது. (க-12)

# 2 ஆயிரம் கொடுப்பனவு கரவெட்டியில் இல்லை

(மந்திகை)

தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் தங்கியிருக்கின்றவர்களுக்குஇரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு இன்னமும் வழங்கப்படவில்லையென பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

மருதன்கேணி, சாவகச்சேரி, பளை பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் கடந்த 6 மாதங்களுக்கும் மேலாக இப்பகுதியில் தங்கியிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது

இதேசமயம், இடம்பெயர்ந்த மக்களின் உடனடித் தேவையை நிறைவேற்று முகமாக வழங்கப்படும் இக் கொடுப்பனவு இற்றைவரை வழங்கப்படாமை குறித்தும் ஏனைய பிரதேசங்களில் இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்ட போதிலும் தம்மீது பாரபட்சமாக நடந்து கொள்வதாக சம்பந்தப்பட்ட மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். உ-23)

# வாகன விபத்தில் இருவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா கண்டி வீதியில் பிராந்திய கல்வி திணைக்களத்திற்கு முன்பாக இடம் பெற்ற வாகன விபத்தொன்றில் இரு பொதுமக்கள் படுகாயமடைந்த நிலையில் வவுனியா ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து நேற்றுக்காலை 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது விபத்தின்போது அரசாங்க ஊழியரான துரைராஜா (வயது 43) விவசாயியான சிறிவர்த்தனா (வயது 35) ஆகிய இருவருமே படுகாயமடைந்தநிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவர்களாவர். (வ)

# யாழ்.மாவட்டத்திற்கு உரம் எடுத்துவர தடையில்லை

### அமைச்சர் டக்ளஸின் முயற்சியின் பேரில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திற்கு உரவகைகள் எடுத்துவர விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப் பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டதையடுத்து இத் தடை நீக்கம் இடம்பெற்றுள்ளது.

உரம்மீதான தடைநீக்கம் தொடர்பாக யாழ். கமநல சேவை அதிகாரி சுந்தரேசன் ஈ.பி.டி பி.யின் யாழ்மாவட்ட அமைப்பாளரும் எம்.பியுமான கே.வி.குகேந்திரன் அவர்களுடன் பேசியதைத் தொடர்ந்தே அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவின்கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (உ-5)

# சமாதானத்தைவலியுறுத்தி முச்சக்கரவண்டி பேரணி

(மட்டக்களப்பு)

சர்வதேச மனித உரிமைகள் தினமாக கடந்த ஞாயிறன்று, மட்டக்களப்பு மாவட்ட முச்சக்கரவண்டி சங்க உறுப்பினர்களால் மாபெரும் சமாதான முச்சக்கரவண்டிப் பேரணி நடத்தப் பட்டது:

200 இற்கும் மேற்பட்ட முச்சக்கர வண்டிகள் ஊர்வலமாக சென்று, மகாத்மா காந்தி சதுக்கத்தையடைந்து மு.ப. 11.30 மணியளவில், சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் அனைத்து முச்சக்கரவண்டிகளினாலும் ஒரே நேரத்தில் ஒலி எழுப்பப் பட்டது.

போரை நிறுத்தி பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கக் கோரும் வாசகங்கள் பலவும் ஊர்வலத்தில் பங்குகொண்ட முச்சக்கர வண்டிகளில் பொருத்தப்பட்டிருந்தன. (உ-60)

# நிலத்தில் வீழ்ந்தவர் நினைவிழந்த நிலையில் மருத்துவமனையில்அனுமதி

(யாழ்ப்பாணம்)

துவிச்சக்கர வண்டியில் சென்றவர், நிலத்தில் வீழ்ந்து நினைவிழந்த நிலையில்யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சத்திரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கன்னாதிட்டிப் பகுதியில் இடம்பெற்றஇச்சம்பவத்தில், சங்கானையைச் சேர்ந்த முத்தையா முத்துராஜா (வயது60) என்பவரே நினைவிழந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவராவார். (உ-12)

# திருடரின் கொட்டமடக்க ஒன்றிணைந்த இளைஞர் கூட்டம்

### கரவெட்டியில் முன்மாதிரி

(துன்னாலை)

கரவெட்டிப் பகுதி இளைஞர்களின் ஒற்றுமையான செயற்பாட்டின் மூலம் அப் பகுதியில் திருட்டுச் செயல் முற்றாகவே ஒழிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இப் பகுதியில் திருடர் தொல்லை அதிகரித்து பொது மக்களின் நிம்மதியானவாழ்வுக்கு பேரச்சுறுத்தல் இருந்து வந்தது.

இதனையடுத்து, கரவெட்டி கிழக்கு-மேற்கு இளைஞர்கள் ஒன்றிணைந்து விழிப்புக்குழு ஒன்றினை அமைத்து, சுழற்சி முறையில் சம்பந்தப்பட்ட பகுதிகளில் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களது செயற்பாட்டுக்கு பேராதரவு வழங்கிய படையினர், விழிப்புக்குழு அங்கத்தவர்களுக்கு இராணுவ அனுமதி அடையாள அட்டை வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று ஏனைய பகுதி இளைஞர்களும் பொறுப்புணர்வுடன் ஒன்றுபட்டு செயற்படுவதன் மூலம் கள்வர் கொட்டமடக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-41)

### அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்,

## உயர் நீதிமன்ற தீர்ப்பை அறிய

# காத்திருக்கும் உலக மக்கள்

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வாக்கெண்ணல் பற்றிய உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு உலகமே காத்திருக்கிறது.

நேற்று முன்தினம் போட்டியாளர் ஜோர்ச் டபிள்யூ புஷ்ஷின் வழக்கறிஞரும் போட்டியாளர் அல் கூரின் வழக்கறிஞரும் தலா முப்பது நிமிடங்கள் தொகுப்புரைகளை நிகழ்த்தினர்.

எனினும் தீர்ப்பு எப்பொழுது வழங்கப்படும் என்பதை திட்டவட்டமாகச் சொல்ல முடியாதென்று அறிவித்துள்ளனர்.

அமெரிக்க நாட்டு மக்கள் யார் வெல்லுவர் யார் தோற்பர் என்பதில் பந்தயங்கள் பிடித்திருக்கிறார்கள் என்றும் உலகமே தேர்தல் முடிவிற்காகக் காத்திருக்கின்றன வென்றும்தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கையால் மிகுதி வாக்குகளை எண்ணி முடிவுசொல்லமுடியாதெனத் தீர்ப்பளிக்கபடுமாயின் தான் தோல்வியை ஒப்புக் கொள்ளத்தயார் என ஜனாதிபதி வேட்பாளர் அல்கூர் தெரிவித்துள்ளார். (து)

### பாக்.முன்னாள் பிரதமர் நவாஷ்ஷெரிப்போல

## எனது கணவரை விடுவிப்பதற்கு ஒருபோதும் உடன்படமாட்டேன்

### எதிர்க்கட்சித்தலைவி காட்டமாக தெரிவிப்பு

(இஸ்லாமபாத்)

சிறையில் இருக்கும் எனது கணவரை பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஷ் ஷெரிப்பைப்போல விடுவிக்க ஒரு போதும் உடன்படமாட்டேன் என எதிர்க்கட்சித்தலைவியான திருமதி பெனாசீர் பூட்டோ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாகிஸ்தானின் உள்துறை அமைச்சர் முகைதீன் கைதர் திருமதி பூட்டோவிடம் பேரம் பேசுகையில் சிறையில் இருக்கும் எனது கணவரை விடுவிப்பதாகவும் உங்கள் குடும்பத்தார் யாவருக்கும் பாதுகாப்புடன் மன்னிப்பு, வழங்குவதாகவும் தெரிவித்தார்.

வேறு நாட்டில் குடியமர ஒழுங்குகள் செய்து கொடுப்பதாகவும் அதற்கு ஈடாக உங்கள் குடும்பத் சொத்துக்கள் எல்லாவற்றையும் ஒப்படைத்து விட்டுச் செல்ல வேண்டும் என்று தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர்நவாஷ் ஷெரிப் விடுதலையாகி நாடு கடத்தப் பட்டது போல் சிறையிலிருக்கும் கணவரையும் விடுதலைசெய்ய பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் முன்வந்துள்ளதை அடுத்தே பெனாசிர் பூட்டோ தனது மறுப்பை தெரிவித்துள்ளார். (து)

### இந்தியாவில் தொடரும்

## அஞ்சல்தொழிலாளர்வேலைநிறுத்தம்

### வாழ்த்துமடல் உற்பத்தியாளர் பாதிப்பு

(சென்னை)

அஞ்சல்தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தால் வாழ்த்து மடல்கள் தயாரிப்போருக்கு பாரிய நஷ்டம் ஏற்படுகிறது.

கிறிஸ்மஸ் வாழ்த்து மடல் புதுவருட வாழ்த்து மடல், பொங்கல்வாழ்த்துமடல்தயாரிப்பவர்கள்இந்தியாவில் அஞ்சல்ஊழியர் வேலைநிறுத்தத்தால் தமது உற்பத்திகளைப் பெருக்க முடியாத நிலையில் இருப்பதாகத் தெரிவித்தனர்.

இதேவேளை இந்திய நகர்களில் இந்த விழாக் காலங்களில் புதிதாக எழும் வாழ்த்து மடல் கடைகளும் குறைந்துள்ளதாகவும்,

உள்ள கடைகளிலும் நடைபாதைக் கடைகளிலும் வாழ்த்து மடல்கள் சிக்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவமும் மற்றும் ஊழியர்களும் தபால் பட்டுவாடாவில்இறங்கிய பொழுது மலை போல் கடிதங்கள் குவிந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது, (து)

## நூறாயிரம்டொலர் பணத்தை அதிபர் எஸ்ராடாவிடம் கொடுத்தேன்

### முக்கிய சாட்சி தெரிவிப்பு

(மணிலா)

நூறாயிரம் டொலர்பணக்கற்றையை அதிபர் எஸ்ராடாவின் மாளிகையில் கொடுத்ததாக முக்கிய சாட்சியான திருமதி எம் ஆர். லிம் தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸ் அதிபர் எஸ்ராடா மீதான பல கோடி டொலர் பெறுமதியான இலஞ்ச ஊழல் தொடர்பான விசாரணை நேற்றுஅந்நாட்டு செனற் சபையில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எனது எஜமானரும் மாநில ஆளுநருமாகிய லூயி சிங்சன் என்னிடம் ஒரு கறுப்புப் பெட்டியில் நூறு ஆயிரம் டொலர் பணக்கற்றையை அதிபர் எஸ்ராடாவின் மாளிகைக்குக் கொண்டுவந்ததாகவும் அப்பொழுது அதிபர் எஸ்ராடா முக்கிய பிரமுகர் ஒருவருடன் உரையாடிக் கொண்டிருந்ததாகவும் அப்பொழுது அவரிடம் நேரடியாகக் கொடுக்க முடியவில்லையெனவும் அதிபரின் செயலாளரிடம் கொடுக்கும்படிதனக்கு பதில் கிடைத்ததாகவும் அதன் பேரிலே செயலாளரிடம் கறுப்புப் பெட்டியை ஒப்படைத்தேன் என்று தெரிவித்தார்.

சிறிது நேரத்தில்எஸ்ராடா மூலம் செய்தி எஜமானுக்கு கிடைத்ததின் பேரில் நான் அவ்விடம் விட்டுச்சென்றேன். என்று சாட்சியான திருமதி எம். ஆர். லிம் தெரிவித்தார்.

இதேவேளையில், பிலிப்பையன்ஸ் அதிபர் எஸ்ராடா மீதான செனட்விசாரணை தொடர்வதாகவும் இன்னும் சில முக்கிய அரசியல் பிரமுகர்கள் சாட்சியமளிக்க இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. (க-து)

### பங்களாதேஷில்,

## குதூகலமாக இடம்பெறும் வெற்றித் திருநாள்

(டாக்கா)

பாகிஸ்தான் இராணுவம் பங்களாதேஷ் இராணுவத்திடம் ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்து ஒன்றாம் ஆண்டு சரணடைந்த நாளை பங்களாதேஷ் அரசு கொண்டாட உள்ளது.

வரும் சனிக்கிழமை இந்த வெற்றித் திருநாளை பங்களாதேஷ் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்துவருகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் அண்மையில் பாகிஸ்தான் தூதுவர் பேசிய உரையில்அவர் திருப்பி அழைக்கப்பட்டதும் இப்பொழுதும் பாகிஸ்தானுக்கும் பங்களாதேசிற்கு மிடையில் உறவு விரிசலடைந்து வருகிறதென்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

## இஸ்ரேல் அடுத்த பிரதமர் பெஞ்சமின் நத்தனயாகுவே

(செல்அவில்)

இஸ்ரேலின் அடுத்த பிரதமராகும் வாய்ப்புமுன்னாள்பிரதமரான பெஞ்சமின் நத்தனியாகுவிற்கே அதிகம் உள்ளதாக இஸ்ரேல் தகவல் தொடர்புசாதனங்கள்நேற்று தெரிவித்தன.

அவ்வானொலி மேலும் தெரிவிக்கையில்;

இஸ்ரேல் பிரதமர் எகுட் பராக் இராஜினாமா செய்ததை அடுத்துஅமைச்சரவை கலைக்கப்பட்டபின்னர் பலர் இஸ்ரேல் பிரதமராவதற்கு போட்டியிட முன்வந்திருக்கிறார்கள்இவர்களில் பெஞ்சமினுக்குநல்லசந்தர்ப்பம்இருப்பதாகஅறிவிக்கப்படுகிறது.

அண்மையில்அரசியல்கணிப்பீட்டின் படி பதவி விலகும் எகுட்பராக்கை விட இருபது வீதம் கூடுதலான வாக்குகள் பெஞ்சமினுக்கு கிடைக்குமென்று தெரிவிக்கப்படுகிறது. (து)

## சட்ட விரோத குடியேற்றம் சிங்கப்பூரில் அதிகரிப்பு

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் சட்ட விரோதக் குடியேற்றக்காரர்கள்கூடி வருகிறார்கள் என்று கணிப்பீடு ஒன்று தெரிவித்துள்ளது.

இவ்வாண்டு சட்ட விரோதமாகச் சிங்கப்பூருக்குள் வந்திருந்தார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் பதினாறாயிரம் பேர் கண்டுபிடிக்கப்பட்டனர் என்றும் இதே வேளை கடந்த ஆண்டு பதினேழாயிரம் பேர் கண்டு பிடிக்கப்பட்டனரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் அண்மையில் சீனா நடத்தும் முடிதிருத்தும் இடத்தில் நான்கு சீனர்கள் சட்டவிரோதமாக நடமாடியமை கண்டுபிடிக்கப்பட்டது. (து)

## கானாவில் எதிர்க்கட்சி ஆட்சி அமைக்கும்

(அக்ரா)

ஆபிரிக்காவின் கானா நாட்டில் அண்மையில் இடம் பெற்ற பொதுத் தேர்தலில் அந் நாட்டின்பிரதான எதிர்க் கட்சியான வீ.பி. கட்சி வெற்றி பெற்றுள்ளது.

இரு நூறு பேர் கொண்ட நாடாளுமன்றத் தேர்தலில் தொண்ணூற்று ஏழு ஆசனங்கள் என்.வி.பி. கட்சிக்குக் கிடைத்திருப்பதாகவும் தொண்ணூறு ஆசனங்கள் தேசிய ஜனநாயகக் கட்சிக்குக் கிடைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கூடிய விரைவில் மந்திரி சபை அமைக்கப்படுமென என்.வி.பி. கட்சியின் முக்கியஸ்தர்கள் தெரிவித்தனர். (து)

### உலக தரிசனப் போட்டி

10-12-2000 அன்று வெளியான உலக தரிசன போட்டி விடைகளுடன் இப்பத்திரத்தை நிரப்பி அனுப்பவும்,

**உலக தரிசன அறிவுப் போட்டி இல: 05**

முழுப் பெயர்;-.............................................

முகவரி;- .............................................

.............................................

பிறந்த திகதி:-..........

போட்டியாளர் கையொப்பம்...............

பெற்ற புள்ளிகள் ..........

### செய்திப்பரல்

★ மத்தியில் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் நாட்கள் எண்ணப்படுவதாக ராஜ்ய ஜனதாதள் தலைவர் லாலுபிரசாத் தெரிவித்தார்.

★ புதனுக்கு முன் இந்திய அஞ்சல் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும்படி மத்திய அரசுகோரியுள்ளது. இந்தியாவில் ஆரியர் அல்லாதவர்கள் ஸ்தான் அரசுகளால் ஸ்தாபித்து வருவதாக தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் கூறியிருக்கிறார். (து)

### பதிவை மேற்கொள்ளவும்

(வண்ணார்பண்ணை)

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவன 2001ஆம ஆண்டுபுதிதாகக் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிதெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பதிவினை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளன.

நேற்றுத் தொடக்கம் பதிவு செய்யும்நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், சம்பந்தப்பட்டோர் தத்தம் கற்கை நெறிகளுக்கேற்ப பதிவினை மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

### பாராட்டு

(சுன்னாகம்)

சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத்தில் அதன் எல்லைக்குள் வசித்து புலமைப்பரிசில் பரீட்சையில் அதிஉயர் புள்ளி பெற்ற மாணவர் மூவர் பாராட்டப்பட்டனர்; (உ-25)

குன்றின் அனைய குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின்.
- குறள்

# வலம்புரி

## காவேரியும் சிங்காரியும்

வெளிமாவட்டங்களுக்குச் செல்வதில் யாழ்குடாநாட்டு மக்கள்படும் துன்பங்கள் சொல்லிமாளா. இத்துன்பம் எல்லா வர்க்கத்தினருக்கும் பொருத்துடையதுமல்ல. குறிப்பாக பணம் படைத்தவர்கள், வர்த்தகப் பெரும்புள்ளிகள், செல்வாக்கு மிக்கவர்களுக்குகொழும்பு செல்வதென்பது சர்வ சாதாரணம். ஆனால் ஏழை மக்கள் கொழும்பிற்கான ஒருபயணச் சீட்டைப் பெறுவதில் கூட அவர்களுக்குக்கிடைக்கும் ஏச்சும், தள்ளுப்பாடும், வெருட்டும் கொஞ்சநெஞ்சமல்ல.

இவற்றுக்குக் காரணம் அவர்கள் ஏழைகள் என்பதால் அல்ல ஏதாவது துட்டு கைநீட்டாததாலேயே இந்நிலை என்பதை மறுப்பதற்கில்லை.

இதுவரை காலமும் யாழ் சிவில் நிர்வாகக்காரியாலயத்தின் பரிபாலனத்திற்குள் இருந்த கப்பல் பயணம் தற்போது 'ரான்' அமைப்பின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. கப்பல் பயண நிர்வாகம் இடம் மாறியுள்ளதே தவிர ஊழலும், செல்வாக்குக் கலாசாரமும் மாறியதாகத் தெரியவில்லை. ஒட்டு மொத்தத்தில் காவேரி தான் சிங்காரி, சிங்காரி தான் காவேரி என்ற நிலையில் தான் கப்பல் பயணச்சீட்டு விநியோகம் அமைந்துள்ளது.

இது குறித்து உரிய நடவடிக்கை எடுப்பதற்காக பயணச்சீட்டு வழங்கும் காரியாலயத்தைஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள மணியம் கட்டடத்திற்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

சிவில்நிர்வாகக் காரியாலயத்திலிருந்து ரானுக்கு மாற்றப்பட்ட பயணச்சீட்டு விநியோகத்தில் சீர்கேடுகள் நீக்கப்படாததனால் இப்போது அமைவிடத்தை - கட்டடத்தை மாற்றிப் பார்க்கப்போகிறார்கள். இம்மாற்றங்கள் சோதிட முறைக்கும் - பாரம்பரிய நம்பிக்கைக்கும் சரிப்பட்டு வருமேயொழிய சீர்கேடுகள் நீங்கப்போவதில்லை என்பது உறுதி.

சீர்கேட்டை ஒழிக்க வேண்டுமாயின், நீதியும் - நேர்மையும் இடம்பெற வேண்டுமாயின் பயணச்சீட்டு வழங்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் பணியாளர்கள் இதயசுத்தி உடையவர்களாக இருக்கவேண்டும். அத்துடன் புகையிரத நிலையத்திற்கு முன்பாக-பயணிகளை ஒழுங்குபடுத்துவதுபோல் நடித்துக்கொண்டு, தங்கள் 'முகவர்' வேலையை கச்சிதமாகச் செய்யும் இளைஞர்களையும் அவ்விடத்திலிருந்து வெளியேற்ற வேண்டும். இவை இரண்டையும் ஏககாலத்தில் செய்வதுடன், லங்கா முடித்த கப்பல் பயண சேவையை உடனுக்குடன் மேற்கொண்டு பயணிகளின் எண்ணிக்கையை குறைக்கவேண்டும். அதன் மூலமே கப்பல் பயணச் சீட்டின் விநியோகச் சீர்கேட்டை அடியோடு ஒழிக்கவும், ஏழைகளுக்கு உதவவும் முடியும். இதனை அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா செய்வாரா? என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

நமது இனத்தின்

# பெருமையை வலியுறுத்தும் விதத்தில் பிள்ளைக்கு பெயர்சூட்ட வேண்டும்.

## நல்லை ஆதீன முதல்வர் வலியுறுத்து

(சங்கானை)

ஒருவருக்கு சூட்டுகின்ற பெயர் அவரது இனத்தின் அடையாளமாக இருக்கவேண்டும்.

அவ்வாறின்றி, தான்தோன்றித்தனமாக தங்களது பிள்ளைகளுக்கு பெயர்வைக்கின்ற பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கின்றி தமிழ் இனத்துக்கே துரோகம் செய்தவர்களாவர்.

இவ்வாறு நல்லை ஆதீன முதல்வர் சிவத்திரு சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வட்டுக்கோட்டை தமிழ்ச் சங்க கட்டட அடிக்கல் நாட்டு விழா அண்மையில் நடைபெற்றபோது, அந்நிகழ்விற்கு ஆசியுரை வழங்குகையில் இவ்வாறு குறிப்பிட்டார். நல்லை குரு முதல்வர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்று, ஒருஆங்கிலப் பெயரைக் காணலாம். சிங்களப் பெயரைக் காணலாம் ஆனால் ஒரு தூய தமிழ்ப் பெயரை காண்பதென்பது மிகவும் அரிதாகவே உள்ளது.

இவ் வட்டுக்கோட்டைப் பதிக்கு சமயத்தையும் தமிழையும் ஒருங்கே வளர்த்த பெருமை மட்டுமன்றிப் பல அறிஞரையும் தோற்றுவித்த புகழும் உண்டு.

அந்த வகையில்,

தமிழ் வளர்ப்பதற்கு சங்கம் அமைத்து, அதற்கென கட்டடமும் அமைக்கவிருக்கும் இம் முயற்சிக்கு இறையருள் என்றும் கிட்டும்.

தமிழ் வளர்ச்சி என்பது பேச்சளவில் நின்றுவிடாது, நடைமுறையில் ஏற்படுவதற்கு இவ்வாறான சங்கங்கள் பாடுபட வேண்டும் என்பது எனது விருப்பம்.

இன்றைக்கு தமிழ்ப்பெயர் வைக்க மறுக்கும் பெற்றோர், நாளைக்குத் தம் பிள்ளைகள் தமிழ் பேசுவதற்கு அனுமதிப்பார்கள் என்பதற்கு என்ன நிச்சயம்?

இந்த மாற்று மோகத்தை மக்களிடையே இருந்து அகற்றி அவர்களிடையே தமிழ் மொழிமீதும், தமிழ்ப் பண்பாடு மீதும் பற்று வைக்க பாடுபட வேண்டிய பாரிய பொறுப்பு இந்த தமிழ்ச்சங்கத்துக்குண்டென்பதை நான் ஞாபகமூட்ட வேண்டிய தேவையில்லை.

நாட்டில், ஒன்று இரண்டல்ல இன்னும் பல இவ்வாறான தமிழ்ச்சங்கங்கள உருவாக வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில், பேராயர் எஸ். ஜெபநேசன் அடிகளார் மற்றும் வலிமேற்கு பிரதேச சபைத்தலைவர் ந திரிலோகநாதன் மற்றும் பெரியார்கள் கலந்துகொண்டு உரையாற்றினர். (உ-ப-18)

விபத்து நிகழ்வதற்கு

# 125 மீற்றர் தூரத்திற்கிடையில் வாகனம் பிறேக் இழந்திருந்தது

## இராணுவ பேருந்து சாரதி சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

விபத்து நேரிடுவதற்கு 125 மீற்றர் தூரத்திற்கிடையில் வாகனத்தின் பிறேக் செயலிழந்து விட்டதென்பதை நான் தெரிந்து கொண்டதுடன், என்னுடன் பிரயாணம்செய்த இராணுவப்பொறுப்பாளருக்கும் தெரிவித்து விட்டேன்.

இவ்வாறு அண்மையில்உரும்பிராய் பகுதியில்இடம்பெற்ற பாடசாலை மாணவி இறக்கக் காரணமான விபத்து தொடர்பானவிசாரணையின் போது இராணுவ பேருந்து சாரதி சுசந்த குமார சந்திரசேசர (வயது 24) தெரிவித்தார்.

மல்லாகம் நீதிமன்ற பதில் நீதவான் மு.சபாநாதன் முன்னிலையில் கடந்த 11 ஆம் திகதி அவர் சாட்சியமளிக்கையில்,

512 ஆம் படைப்பிரிவில் யூக 4302 என்ற பேருந்தின் சாரதியாக இம்மாதம் 7 ஆம் திகதிகடமையேற்றிருந்தேன்.

சம்பவதினம் காலை யாழ்ப்பாணத்திலிருந்து 30இராணுவத்தினரை ஏற்றிக் கொண்டு பலாலி வீதி வழியாக மணித்தியாலத்திற்கு 20 கிலோ மீற்றர் என்ற வேகத்தில்வாகனத்தைச் செலுத்தி வந்தேன்.

பேருந்து அதிக பாரம் காரணமாக பிறேக்கினை இழந்திருந்தது.

எனது வாகனத்திற்கு சில மீற்றர்கள் முன் லொறி ஒன்று பின்பக்கமாக நகர்ந்ததனால், வாகனத்தின் வேகத்தை மணிக்கு 5 கிலோ மீற்றர் ஆக குறைந்து லொறியின் ஒரு பக்கமாக செலுத்தினேன்.

இதன் போது சற்று முன் நகர்ந்த லொறியுடன் பஸ் மோதாமல் இருப்பதற்காக மதில்கரையோராமாக எனது வாகனத்தைச் செலுத்தினேன்.

இதற்கிடையில் வீதியில் தோன்றிய 3 மாணவிகளில் இருவர் லொறியைக் கடந்து விட்டனர்,

மற்றையவர்வீதியோரமாக நின்றிருந்தார்.

அவ்வேளை, எனது வாகனத்தை நிறுத்த இயலுமான வரை முயன்றுகொண்டிருந்த போது, அதன் மிதிபலகைப் பக்கமிருந்து பாரிய சத்தம் கேட்டது.

அப்போது எமது இராணுவப் பொறுப்பாளர் விபத்து நிகழ்வதாக சத்தமிட்டார்.

பேருந்தை நிறுத்திஇறங்கிப் பார்த்த போது மாணவி ஒருவர் தலையில் கடும் காயங்களுடன் காணப்பட்டார் என்று தெரிவித்தார்.

இதேசமயம்,

மேற்படி பாடசாலை மாணவியின் மரணம் விபத்தினால் ஏற்பட்டது என விசாரணைகளின் முடிவில்மல்லாகம் நீதிமன்ற பதில் நீதவான் தீர்ப்பளித்தார்.

(க)

அயலவருக்கு

# தொல்லை கொடுத்தவர் மனநோயாளியாம்

(சுண்டுக்குளி)

அயலவர்க்குமிகுந்ததொல்லை கொடுத்து வந்த மனோநிலபாதிக்கப்பட்ட குருசோ வீதி வாசி பொலிஸாரின் தலையீட்டினால் தெல்லிப்பழை மனநோயாளர் சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அயலவரின் இருப்புக்கே மிகவும் அச்சுறுத்தலாக விடுளங்கி வந்தமேற்படி நபர் வீதியால் செல்வோர்க்குகல்லெறிதல், பண்பற்றவார்த்தைகளை பிரயோகித்தல் என பலருக்கும் தொல்லை கொடுத்து வந்தார். சம்பவனெம் பெண்கள் இருவரை பலமாகத் தாக்கியதுடன் இவரின் அட்டகாசம் மேலும் அதிகரிக்கவே பொதுமக்கள் பொலிஸாரிடம் முறையிட்டதாகவும் இதனையடுத்து பொலிஸார் இவரை கைது செய்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

(உ-110-59)

# வவுனியா அரசஅதிபருக்கு அவசர அழைப்பு

வவுனியா நகரில் வசிக்கும் இடம்பெயர்ந்த மக்களுடைய புனர்வாழ்வு மீள் குடியேற்றம் குறித்து தீர்க்கமான முடிவுகள் எடுப்பதற்காக வவுனியா மாவட்ட அரச அதிபர் கே. கணேஸ் கொழும்பிற்கு அவசரமாக அழைக்கப்பட்டுள்ளார்.

வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு தமிழ் மொழி அமுலாக்கல் இந்து கலாச்சார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பின் பேரில் இவர் நேற்று அவசரமாக கொழும்பிற்கு புறப்பட்டு சென்றுள்ளார் வவுனியா நலன்புரி நிலையங்களில் 23ஆயிரம் இடம் பெயர்ந்த மக்கள் வசித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## அன்னை சாரதாதேவி ஜெயந்திதினம்

(மந்திகை)

தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் ஜெயந்தி தினம் எதிர்வரும் 17 ஆம் திகதி பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமத்தில் நடைபெறும்.

மேற்படி நிகழ்வு அதிகாலை 5 30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து விசேட பூசைகளும் பஜனைகளும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-23)

## கிளிநொச்சியில் மாதிரி பனந்தோப்பு

(வவுனியா)

கிளிநொச்சிப் பகுதியில், 50 ஏக்கர் நிலப்பரப்பில் மாதிரி பனந்தோப்பு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது

கிளிநொச்சி முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் கடந்த பத்தாண்டு காலத்தில் அழிக்கப்பட்ட 15 இலட்சம் பனை மரங்களை ஈடுசெய்யும் வகையிலேயே இப்பனந்தோப்பு அமைக்கப்பட்டுள்ளது.

(உ)

## பழைய மாணவர்க்கு போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையின் அறுபதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடு முகமாக, தற்போது வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் இப்பாடசாலையின் பழைய மாணவரிடையே பல்வேறு போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

பொது அறிவு, நடனம், சித்திரம், கதைகூறல் சங்கீதம், பேச்சு, நீராம்பாய்தல் ஆகியபோட்கள் அடங்கும்.

(உ)

## சங்கானையில் பொதுமக்கள் சிரமம்

(சங்கானை)

வலி. தென்மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட அனைத்து சன சமூக நிலயங்கள் மற்றும் நூல்நிலையங்கள் என்பனவற்றில் பணியாற்றும் நிர்வாகத்தினருக்கான பொதுக் கூட்டம் இன்று காலை 10 மணியளவில் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது

மேற்படி கூட்டம் வலி. தென்மேற்கு பிரதேசசபைத் தலைவர் வெலிச்சேர் ஆன்ரன் ஜோன்சன் தலைமையில் நடைபெறும்.

(ச-ப-16)

## 12பேர் தமிழகம் சென்றனர்

(வவுனியா)

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியிலிருந்து பன்னிரண்டு ஈழத்தமிழர்கள் நேற்றுபடகு மூலம்தமிழகம் சென்றுள்ளனர்.

நேற்றுக்காலைஇராமேஸ்வரம் அரிச்சல் முனையில் இறக்கிவிடப்பட்ட இவர்கள் மண்டபம் அகதிமுகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை அகதிகளை ஏற்றிச் சென்ற படகோட்டிகள் மூவரையும் இராமேஸ்வரகடலோரப்பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் தெரியவருகிறது. (இ)

## தாச்சிப் போட்டி

(இணுவில்)

யாழ்மாவட்டதாச்சிசங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக்கழகம் அமரர் நல்லதம்பி ஞாபகார்த்தமாக நடாத்தும் தாச்சிசுற்றுப் போட்டியில் இன்று உடுவில் ஆலடி சிந்துவிளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (இ)

# சமாதான பதாதை தீயில் கருகியது!

(கொழும்பு)

உலக சமாதான தினத்தை முன்னிட்டு 70அரசசார்பற்ற மனித உரிமை அமைப்புகள் ஒன்று சேர்ந்து கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் சுற்றிக் கட்டிய ஒரு கிலோ மீற்றர் நீளமான சமாதான பாதாதைக்கு விஷமிகள் தீவைத்தனர்.

இதனால் 25 மீற்றர் வரையான பதாதை தீயில் கருகியுது. இப்பதாதையில் ஐயாயிரம் பேர் கையெப்பமிட்டிருந்தனர் என்பதும் குறிப்பிதக்கது. (ந)

# கப்பல் பயணச்சீட்டு மணியம்கட்டடத்தில்?

(யாழ்ப்பாணம்)

யாழ் கண்டி வீதியில்அமைந்துள்ள றான் அலுவலகத்தில் இயங்கி வந்தகப்பல் பயணச்சீட்டு வழங்கும் பிரிவுஇன்று முதல் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள மணியம் கட்டடத்தில் இயங்குமென தெரிவிக்கப்படுகிறது. போக்குவரத்து இடைஞ்சல்கள் மற்றும் சீர்கேடுகளைதவிர்க்கவே இவ்விடமாற்றம் மேற்கொள்ளப் படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந)

# அமெரிக்க இராணுவ நிபுணர்கள் கொழும்பில்

(கொழும்பு)

இலங்கை பொலிஸாருக்கும், பாதுகாப்பு படையினருக்கும் மனித உரிமைகளை முன்னேற்று முறைகளில் பயிற்சி வழங்கவென அமெரிக்க இராணுவ நிபுணர்கள் கொழும்பு வந்துள்ளனர்.

இவர்கள பொலிஸாருக்கும் படையினருக்கும் ஆலோசனையை வழங்கும் செயற்றிட்டமொன்றை நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை அமெரிக்கா தனது பசுபிக்கட்டளை பீடத்தின் உறவு விரிவாக்கத்திட்டத்தில் இப்பொழுறு இலங்கையையும் உள்ளடக்கி ஒத்துழைப்பு வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ந)

**4மணி--**

தானத்தில் தங்க வைக்கப்பட்டனர்.

எனினும் கப்பல் புறப்படுவதற்குரிய கஷ்டநிலை சீர்செய்யப்பட்டமையினால் 4 மணித்தியாலம் தாமதித்து நேற்றைய தினம் 7-45 மணிக்கு கப்பல் புறப்பட்டு விட்டதாக் காங்கேசன்துறை துறை முக வட்டாரங்கள் தெரிவித்தன: (வ)

**ஜேவிபி--**

ஆரம்பமாகவே இன்று லிப்ரன் சுற்றுவட்டத்தில் இவ் ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகிறது.

இதேசமயம் நோர்வேஅரசு தமது சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளுமாறு ஜே.வி.பியை அழைத்த போதும், ஜே.வி.பி. அதில் கலந்து கொள்ளவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சமாதானம் வேண்டுமெனவும், நோர்வே அரசே அதனை மேற்கொள்ள வேண்டுமெனவும் கோரி, நேற்று முன்தினம் கொழும்பு விகாரமாதேவி பூங்காவில்ஒரு கிலோ மீற்றர் நீளமான பதாதைப் போராட்டம் நடைபெற்றுள்ளது.

இந் நிலையில் இனவாதப் போக்குடைய ஜே.வி.பியின் செயற்பாடு சமாதானப் பாதையில் ஒரு தடைக்கல்லாகவே விளங்குவதாக அரசியல் அவதானிகள் விசனம் தெரிவித்துள்ளனர். [இ]

# சிறுவன் மரணம்

[வவுனியா]

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில்சிறுநீரக கோளாறு காரணமாக10 வயதுசிறுவன் ஒருவன்பரிதாபகரமான முறையில்மரணமாகிஉள்ளான். ஸ்கந்தபுரம்மணியர்குளம் புதியகுடியிருப்பு பகுதியில் வசிக்கும் என். செல்வானந்தம் என்னும் சிறுவனேஇவ்வாறு பரிதாபகரமானமுறையில் மரணமானதாகவும் போதியவைத்திய வசதிகள் இன்மையே இம்மரணத்திற்கு காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

**புலிகளை---**

அமுல் செய்யப்படத் தொடங்கியதும் இலங்கைஅரசாங்கம் புலிகளைத் தடைசெய்யுமாறு முன்வைத்த கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

எந்தெந்தசர்வதேசப் பயங்கரவாத இயக்கத்தைத்தடைசெய்வது எனும் விவகாரம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் வேளையில் இதனைத் தீர்மானிக்கலாம் என்றும் அக் கடிதத்தில் அவர் அவர் எழுதியுள்ளார். (ந)

**ஈழவேந்தன். . .**

கைக்கு பலவந்தமாக நாடு கடத்தியிருப்பது தமிழ் இதயங்களை வேதனைக்குள்ளாக்கியுள்ளது அரசியல் தஞ்சம் கோரியுள்ள வரை அவரது உயிருக்கு ஆபத்தான நாட்டுக்கு அனுப்பக் கூடாதென்ற ஜெனிவா உடன்பாட்டுக்கு முரணாக நாடு கடத்தியிருப்பது இரக்கமற்ற கொடுமையான செயல் என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இவ் ஆர்ப்பாட்டத்தில் சகல தமிழர் விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர்களையும் மற்றும் தமிழக பொது அமைப்புக்களையும் கலந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (இ)

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண

# ஈரானிய ஜனாதிபதி வலியுறுத்து!

இலங்கையில் இடம்பெற்று வரும் இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு ஈரான் ஐனாதிபதி முகமட் கதாமி பராட்டுத தெரிவிப்பதோடு விரைவில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டிய தன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

ஈரானுக்கு விஜயம் செய்த வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அன்நாட்டு ஜனாதிபதியை சந்தித்த போதே மேற்கண்டவாறு ஈரான் ஜனாதிபதி தெரிவித்தார்.

இச்சந்திப்பில் இலங்கைக்கும்ஈரானுக்குமிடையேயான நல்லுறவுகளை பேணுவதற்கும் ஈரான் ஜனாதிபதி உறுதியளித்தார்.

எண்ணெய் விலை அதிகரிப்பினால் வளர்முக நடுகள் எதிர்நோக்கும் கஷ்ரங்களையும் கவனத்தில் கொண்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இச்சந்திப்பில் இலங்கையின் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்ககுமரதுங்கா இலங்கைக்கு ஈரானிய ஜனாதிபதியை விஜயம் செய்யுமாறுவிஷேடகடிதமொன்றையும் அமைச்சர் கதிர்காமர் ஈரானிய ஜனாதிபதியிடம் கையளித்தார். (வி)

## 1100 மிதிவெடிகள் மீட்கப்பட்டன

(வவுனியா)

கனகராயன்குளம் பகுதியில் கடந்த ஒரு வார காலத்தில்1100மிதிவெடிகள் அகற்றப்பட்டதாக வன்னித் தகவல்கள்தெரிவிக்கின்றன.

கனகராயன் குளம்சமூக மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் பொது மக்கள், அரச ஊழியர்கள், மாணவர்களின் உதவியுடன் இம் மிதிவெடிகள் அகற்றப்பட்டதாகத் தெரியவருகிறது. (வ)

**எட்டுக்---**

சேவைமன்ற அதிகாரிகேணல் விபுல குணரட்னா விடுத்துள்ளார்.

இதேவேளை 71பேர் வவுனியா புனர்வாழ்வு முகாமிற்கும் அனுப்பப்படவுள்ளனர். (ந)

**2001ம்---**

மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவிருப்பதாகவும், இதில் சுமார் 231மாணவர்களை அனுமதிப்பதற்குரிய நடவடிக்கைகளை தாம் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

தற்போது யாழ் கல்வியல் கல்லூரியில் 69 மாணவர்கள் பயிற்சி பெற்றுவருகின்றனர்.

தற்போது இராமநாதன் மகளிர் கல்லூரியில் நடைபெற்று வரும் சேிய கல்வியியல் கல்லூரி அடுத்த வருடம் முதல் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இயங்கவுள்ளதகவும் தெரிவிக்கப்படுகிறது. [வ]

**கோபுர---**

பணியை யாழ்.ரெலிக்கொம் நிறுவனம் மேற் கொண்டுள்ளது.

தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் தொலைத் தொடர்புக்கோபுரம் அமைப்பதற்குரிய சில பொருத்திகள் மலேசியாவிலிருந்து எடுத்து வரப்படும் வரை கோபுரத்தின் நிர்மாணப்பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை இக்கோபுரம் அமைப்பதற்கான உபகரணங்களை கோபுர நிர்மாண பணியில் ஈடுபட்டுள்ள மலேசிய தொழில்நுட்ப நிறுவனம் எடுத்து வருவதற்குரிய ஏற்பாடுகளை செய்துள்ளதாக வடக்கு- கிழக்கு பிராந்தியத் தலைவர் எஸ்.கனகசூரியர் வலம்புரிக்குத் தெரிவித்தார். (வ)

# மீன்பிடிக்க தடையை நீக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பாஷையூர், கொழும்புத்துறை மீனவர்கள் சுமார் 150 பேர் நேற்று ஈ.பி.டி.பி.யின் யாழ். அலுவலகத்திற்குச் சென்று மீன்பிடித் தடையை நீக்க வழிசெய்யுமாறு கோரிக்கை விடுத்தனர்.

ஈ.பி.டி பியின் யாழ். மாவட்ட பிரதி அமைப்பாளரும் நல்லூர் பிரதேச சபைத்தலைவருமான க.மணி பல்லவராஜனைச் சந்தித்தே இக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இது தொடர்பாக பலாலி இராணுவத் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டுள்ளதாகச் செய்திகள் தெரிவித்துள்ளன. (ந)

# இலங்கை மீனவர் 56பேர் இந்திய அரசால் விடுதலை

(கொழும்பு)

இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கையைச் சேர்ந்த 56மீனவர்கள் இந்திய அரசாங்கத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை மீன்பிடித்துறை அமைச்சும் வெளிவிவகார அமைச்சும் இணைந்து இந்திய வெளிவிவகார அமைச்சருடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து கேரள மாநிலத்தில் சிறைவைக்கப்பட்டிருந்த மேற்படி மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்குரிய நடவடிக்கையை இலங்கை எயர்லைன்ஸ் விமானக்கம் பனிமேற் கொள்ளுமென்றும் தெரிவிக்கப்படுகிறது (இ)

# இராணுவ ஆட்சேர்ப்பு டிசம்பர் 15ம் திகதிவரை

இலங்கை இராணுவத்தினருக்கான ஆட்சேர்பு திகதி டிசம்பர் 15ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் நடத்திய ஆட்சேர்ப்பில் தோல்விகண்டதையடுத்தே இந்த நீடிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை ஐயாயிரம் பேர் சேர்கப்பட்டதாகவும் அதில் நாலாயிரம்பேர் உயர் பயிற்சிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் படைவட்டாரங்கள் கூறியுள்ளன.

இதுவேளை இராணுவத்திலிருந்து தப்பி ஓடிய ஐந்நூறு பேர் குற்றச் செயல் புரிந்தமைக்காக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் பாலியல் வல்லுறவு கொலைமற்றும் கொள்ளைபோன்ற குற்றசெயல்கள் புரிந்தவர்களாவர்: (5)

**பேச்சுவார்த்தை.-**

கரன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கான அறிவிப்பை விடுத்திருந்தபோதும், அதற்குரிய பதிலெதையும் அரசாங்கம் இதுவரை தெரிவிக்கவில்லையென அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தற்பொழுது வடக்கு கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்று வரும் யுத்தம் காரணமாக இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பாரியளவிலான பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இதனால் பங்குச் சந்தையில் கூட பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் முன்னர் வலியுறுத்தி வந்ததுபோல், வடக்கு கிழக்கிலிருந்து இராணுவம் வாபஸ் பெறப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்கவில்லை. இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்திற்கான பொருளாதார தடையை நீக்குதல்

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தைக்கு நல்லதொரு சமிக்ஞையாக அமையுமென்று கூறிய கதிர்காமர், விடுதலைப் புலிகளுடனான யுத்தம் காரணமாகவே அத்தியாவசியப்பொருட்களுக்கு வடக்குக் கிழக்கில் தடைவிதிக்கப் பட்டுள்ளதாக தெரிவித்தார்,

அரசு வடக்குக் கிழக்கில் வாழும்தமிழ்மக்களின் வாழ்க்கையை, இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்கான சூழ்நிலையை புலிகளுடனான பேச்சுவார்த்தையின் போது உருவாக்க முடியுமென தெரிவித்த கதிர்காமர் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைதொடர்பாக மேலும் ஒரு அறிக்கையை விடுக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (வ)


**யாழ். நகரில்**

2001 ஆம் ஆண்டுக்கான தரமான கலண்டர்கள், டயறிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

**மக்மிலன் புத்தகசாலை**

இல. 3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம் (கி/1109)



**உடன் வாங்கப்படும்**

பாவித்த மேசை, அலுவலக மேசை, கதிரைகள் உடன் வாங்கப்படும்
விற்கவுள்ளோர் நேரிலோ தபால் மூலமோ தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல. - 100
வலம்புரி
15 வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்-


இப்பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தினரால் இல: 15, வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம்ஆண்டு டிசம்பர் மாதம் 13ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது: